ஸ்ரீரஸ்து.

ஸ்ரீ கிருஷ்ண லீலானு வைபவம்.

இவை

ஸ்ரீவில்லிப்புத்தூர் :

ஸ்ரீமான் பாகவதர். ஸ்ரீ, ஸ்ரீநிவாஸய்யங்காரால்

இயற்றப்பட்டது



சென்னை :

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ்.

1924.

[விலை அணு 8.

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ கிருஷ்ணலீலாநு வைபவம்.

ஆண்டாள் ஸ்துதி.

இராகம் பியாக் ஆதிதாளம்.

பல்லவி.

கோதாய்நீ கிருபை செய்குவாய்
பாதத்தை நம்பினேன் தாஸன் (கோ)

அநுபல்லவி.

வேதைப்படும் பக்தர்களை ஆதரவுடனே காக்க
விஷ்ணு சித்தன் மகளாகி வேதம் துதிக்க வந்த (கோ)

சரணம்.

பட்டர்பிரான் மகளாகி பாங்காய் வடபத்திரற்கு
திட்டமுடன் மலர் தனை தேவியே சூடிக்கொடுத்த (கோ)

ரெங்கமன்னர் தன்னுடனே ரத்ன சிங்காசனந்தன்னில்
எங்கும் பிரகாசமாகவே மங்களமாய் வீற்றிருக்கும் (கோ)

எந்தனுக்கு உன்னை விட்டால் எதுங்கதியில்லை தாயே
மைந்தன் ஸ்ரீனிவாஸன் தன்னை மகிழ்வுரக்காப்பாயம்மா (கோ)

இராகம்—செஞ்சுருட்டி, ஆதிதாளம்.

பல்லவி.

ஸ்ரீ ரெங்கநாதனை சேவிக்காமல் வீணாய்
ஜென்மத்தைக் கழிக்கலாமோ மனமே (ஸ்ரீ)

அநுபல்லவி.

பாரெங்கும் சுற்றியும் ஸ்ரீரெங்கம் போகாமல்
ஊரெங்கும் திரிந்ததால் உனக்கென்ன பலன் சொல்வாய் (ஸ்ரீ)

சரணம்.

உபயகாவேரி ஓடிடும் மத்தியில்
உள்ள முருகித்தம்மை பஜிக்கும் பக்தர்களுக்கு
அபயங்கொடுத்து ஆதரித்த ஸ்ரமத்தால்
அனந்தாழ்வான் தன்மேல் அயர்ந்து சயனித்த (ஸ்ரீ)

அண்டர்கள் முனிவர்கள் அனைவரும் போற்றும்
கொண்டல் ஸ்ரீ வண்ணனே குவலயத் தோற்காக
மண்டலந்தன்னில் மகிழ் வைகுண்டத்தையே
கண்டு தரிசிக்க கருணை புரிந்தவனும் (ஸ்ரீ)

அந்தரங்கமாய் பக்தர் அநுதினம் வசிக்கும்
சந்தரபுஷ்கரணி சார்ந்த ரங்க விமானம்
மந்திரத்திலுத்தம மதிளரங்கத்தையே
மைந்தன் ஸ்ரீநிவாஸன் மகிழ்ந்து துதிக்கும் (ஸ்ரீ)

இராகம்—நாதநாமக்ரியை. ஆதிதாளம்.

பல்லவி.

ரெங்கநாதனை பஜிப்பாய் மனமே தினம் (ரெ)

அநுபல்லவி.

எங்கும் பிரசித்தி பெற்ற இக்ஷுவாகு வம்சத்தினில்
இருந்து வெகு காலமாய் எழுந்தருளிய ஸ்ரீ (ரெ)

சரணம்.

அயோத்திமாநகர் தன்னிலே அரசர்களால்
அநேக நாளாராதித்து அமர்ந்தவனை
வயோதிகராஜனுக்கு வந்துதித்த ஸ்ரீராமன்
வியோத்தம ஞனபக்த விபீஷணனுக்களித்த. (ரெ)

இலங்கைக் கதிபதியும் எம்பெருமானை
ஏற்று மனமகிழ்ந்து ஏகுங்காலையில்
துலங்கும் காவேரிமத்தி துளபதரன்கண்டு
உளமகிழ்ந்து தங்கிய உலகமளந்தோனை. (ரெ)

விந்தையிதனைக்கண்ட விபீஷணனும்
சிந்தை நொந்துழுதிக்க துயில்வனப்போ
இந்த ஸ்தலங்கனிலே இருக்க மனமுகந்தேன்
முந்தும் உனதுபூஜை முக்காலு மேற்பேனென்ற. (ரெ)

இராகம்—மத்யமாவதி. ஆதிதாளம்.

பல்லவி.

ரெங்கா கருணிஞ்சரா கருடதுரங்கா
பவபங்க ஸ்வபாங்க. (ரெ)

அநுபல்லவி.

அங்கஜ ஜெநக புஜங்க சயனவி
ஆங்க கமன நன்னுதரிஞ்சு ஸ்ரீ. (ரெ)

சரணம்.

எந்தனு வேடுது நேமி சேதுபக
வந்துட னுயொக ஹிம்சதீர்ச்சு ஸ்ரீ. (ரெ)

தரணி பராங்குச தாஸாடு கோரின
வரமுலு சகுபர வரிஸுதேவ ஸ்ரீ. (ரெ)

பூதேவி, பிரும்மனிடம் முறையிடல்.

இகனைனனு, கீர்த்தன மெட்டு.

பல்லவி.

பிரும்மதேவனே பேதைநா னென்செய்வேன்
கருமமே மேலோங்கும் கசடர் சிருஷ்டியினாலே. (பி)

அநுபல்லவி.

வர்மமோவுமக்கு வஞ்சியாளின்மீது
மிஞ்சும் பூபாரத்தில் மெல்லியும் நலியவேதான். (பி)

சரணம்.

துஷ்டர்கள் செழிக்க கஷ்டங்கள் மிகுக்க
தோகையாளொடுங்க தோற்றங்கள் வெறுக்க
அஷ்ட திக் பாலர்கள் அலுவல் குறுக
அம்சவாகனு வுன் இச்சையாய் சிருஷ்டிபெருக. (பி)

க்ஷீராப்தியில் பிரம்மா, பூதேவியுடன், தேவரும் துதித்தல்.

இராகம்—அமீர்கல்யாணி. தாளம்—ரூபகம்.

கண்ணி.

தேவாதி தேவா க்ஷீராப்தி வாசா
மூவர் முதல்வா மோக்ஷாதிகாரா
பாவலர் போற்றும் பரமபுருஷா
தேவரெம் மிடரை தீர்த்தாளும் நாதா. (தே)

பூதேவி, தனியாய் முறையிடல்.

இராகம்—பீலு. தாளம்—ரூபகம்.

பல்லவி.

நாதனை தம் சோதனைக்கு
நங்கையும் பாத்ரளாவேனோ (நாத)

அநுபல்லவி.

வேதனைக்குள்ளாகி நொந்தேன் பாதக பூபாரந் தன்னால்
ஆதாரம் நீர் செய்யாவிடில் அரிவை யாளெனக்கு திக்கார் (நாத)

சரணம்.

தருமங்கள் குறையலாச்சு தரணியின் சீர்மாறலாச்சு
வருமமும் பெருகலாச்சு வஞ்சியின் சுமை மென்மேலாச்சு (நாத)

பகவான் வாக்கியம்.

இராகம்—பூரி கல்யாணி தாளம்—ரூபகம்.

பல்லவி.

துன்பம் விலகும் நாள் வந்தது
தொல்லுலகில் நானுதித்து துஷ்டர்களை இனிவதைப்பேன் (து)

அநுபல்லவி.

இன்பம் பெருகவே இனிநான் வசுதேவற்கு
அன்புடைய பாலகனய் அவதரிப்பேன் தப்பாது (து

சரணம்.

தர்மங்கள் குன்றியதால் தாரணியில் பெரும்பகையும்
வர்மங்கள் முற்றியது வஞ்சகப் பொறாமையுடன்
மர்மமாய் என் ஸ்வரூபம் மானிடரில் சிலர்காண
கர்மமதை நான்முடிப்பேன் கசடர் பெருங்கும்பழிய (து)

விருத்தம்.

தேவகி வசுதேவற்குத் திருமணம் முடித்துக் கம்சன்
ஆவலாய் தேரதனை அன்புடன் நடத்தும்போது
காவலா உந்தன் தங்கை கண்யமாம் கெர்ப்ப மெட்டால்
போவதுன்னுயிரும் நிச்சயம் புகன்றிட்டேன் அசரீர் காண்பாய்

கம்சன், தேவகியை வெட்டத் துணிதல்.

இராகம்—பியாக் ஆதி தாளம்.

கண்ணி.

அசரீறு மொழிதன்னை அரசன் கம்சன் கேட்டு
அந்தரங்கமும் வேறுபட்டு
அசுரன் போல் தங்கையை அரைந்து வெட்ட முயல
அதைக் கண்டு வசுதேவர் தடுத்தார் அதைக் கண்டு
[வசுதேவர் தடுத்தார்.

தேவகி, கம்சன் தர்க்கம்.

இராகம்—தேசிகதோடி, ஆதி தாளம்.

கண்ணிகள், தர்க்கம்.

அண்ணு சிறிதும் பிழை செய்தறியேன்
அடியாள் எனையே வதைத்திட நினைந்தாய்
மண்ணுள் பெணையுன் மைந்தன் கொல்லவே
வருவான் வருமுன் கொல்வேனுனையே.

கண்ணால் சுதனைக் காணா முனமே
கடிகித் தலைதனை இடறவே முனைந்தாய்
எண்ணா துனையே இட்சணங் கொல்லவே
இபன்றது அசரீர் இசையுள மொழியால்.

வசுதேவர் கம்சனை சமாதானம் செய்தல்.

இராகம்—தோடி. ஆதி தாளம்.

பல்லவி.

மைத்துனா பொறு மங்கையை வெட்டத் துணிந்த
இத்தினந்தனில் ஏற்குமோ நீர் செய்யுந்தொழில். (மை)

அநுபல்லவி.

மணம்முடித்த மலர்மாலை வாடவில்லை
குணம் மாறினீர் கொற்றவா யீதேதேனோ தொல்லை. (மை)

சரணம்.

உந்தன் தங்கை மீது உற்ற நல் பிரியத்தால்
ஊர்வல மீதினில் ஓட்டினீர் ரதத்தை
மைந்தன் எட்டல்லோ மாற்றா னென்றதும் துயிற்கு
சிந்தை நையாது அச்சிசுவை நீர் வதைசெய்யும்(மை)

கம்சன் சொல்லல்.

இராகம்—கமாஸ். ஆதி தாளம்.

கண்ணி.

ஆனாலுங்களை அடைத்து வைப்பேன் சிறையில்
தானாய் எனைக்கொல்லும் தனையன் பிறக்கும்வரை. (ஆ)

காலும் கைகளுக்கு கனத்த விலங்கிடுவேன்
மேலும் சத்ருவைப் பெறும் மெல்லியே வசுதேவரே நான். (ஆ)

போது கதையின் சேர்க்கை.

சாகி, வர்ணமெட்டு

சிறை தன்னி லடைபட்டு சிந்தை நொந்துருகிய
தேவகி வசு தேவர் தமக்கு
அறைதனில் பிறந்திட்ட அறு குழந்தைகளையும்
அந்தோ கம்சன் வெட்டியே எறிந்தான் பாவி
அந்தோ கம்சன் வெட்டியே எறிந்தான்.

ஏழாவது கர்ப்பம் ஈசனது மாயையால்
ஏகிற்று ரோகிணி தன் பால்
எட்டாவது கர்ப்பம் ஏற்றதை கம்சன்கண்டு
இரவும் பகலும் துக்கமுற்றான் கம்சன்
எப்போ எப்போ வென்றேங்கி நின்றான்.

தேவகி துக்கித்தல்.

ஸுக நாரத பிரும்மமே மெட்டு.

கண்ணிகள்.

நாதா நாம் இஜ்ஜென்மம் நாட்டினிலெதற் கெடுத்தோம்
வேதனைக்கென்றே நம்மை வேதன் பிறப்பித்தானோ. (நா)

வருஷ மொருகர்ப்பம் வஞ்சிநானும் கொந்துதாங்கி
புருஷ ரத்னமாய்பெற்று புல்லனுக் கிரையாக. (நா)

ஏழாவது தோற்றம் ஏகிற்றெங்கோ காணேன்மாயம்
எட்டாவதும் கிட்டிற்றே எங்குதே ஈதேதாமோ. (நா)

தேவகி, வசுதேவர், பகவானைத் துதித்தல்.

கண்ணா மணிவண்ணா மெட்டு.

கண்ணிகள்.

வாசா ஸ்ரீ வைகுண்ட வாஸா
வந்தித்தோம் கார் பக்தர் நேசா
பாசமுடன் பணிந்தோம் ஈசா
பாது கார்ப்பாய் எம் விச்வாஸா. (வா)

அறு குழந்தை பெற்று நாங்கள்
அந்தோ எமனுக் கிறை கொடுத்தோம்
பெறுமி கெட்டா திக்குழந்தை
உன், பிக்ஷையாக ஈய அடுத்தோம் (வா)

போது, பகவான், அவதாரம் செய்தல்.

இராகம்—மோஹனம். சாப்பு—தாளம்.

பல்லவி.

அவதாரம் செய்தாரே ஸ்ரீ கிருஷ்ணனாக
அவதாரம் செய்தாரே, பகவான் (அவ)

அநுபல்லவி.

தவம்செய் முனிவர்தேவர் தரணியுள்ளோர் துதிக்க
தந்தை வசுதேவர் தாய் தேவகியுமாக. (அவ)

சரணம்.

சங்குசக்ரதாரியாய் தாய்தந்தையற்கு
மங்களமாய் சேவைகொடுத்து தம்மை
பங்கமில்லாமலெடுத்து கோகுலத்தில்
பட்சமுடன் விடுத்து அங்கு
மங்கைய சோதைக்கிப்போ பிறந்திட்டமாயைதனை யெடுத்து
இங்குநீர் வந்திட யாவு மனுகூலிக்கும்
உங்கள் துயரமினி ஒடிடும் தப்பாது
இங்கிதமில்லாக் கம்சன் எனைக்கொல்லலாகாது
சங்கைகொள் பாலகனாய் சஞ்சரிப்பே னென்றுசொல்லி. (அவ)

போது, கதையின் சேர்க்கை.

இராகம்—கானடா. ஆதி தாளம்.

கண்ணிகள்.

1. பகவானு மப்போது பாலகனாகிட
பார விலங்குகளும் சோர்ந்துமே கழல
2. கதவுகள் திறக்க காவலரொடுங்க
காரிருள் சிறக்க கார்துளி துளிக்க

3. வசுதேவர் தாங்கி வீசிதனிற் செல்ல
அசுரர் துலேந்தாரென அந்தரர் சொல்ல

4. கோகுலத்தில் விடுத் தக்குழந்தையை யெடுத்து
வேகமுடன் சிறை வந்ததும் வசுதேவர்

5. விலங்குகள் பூண்டது வேவுகர் விழித்திட்டார்
துலங்குந்தாள் பூட்டிட தொல் கபாடமும் சாற்ற

6. குவா, குவாவென்று குழந்தையும் அழுதிட
கொட்பெனக் காவலர் கோமானிடம் விள்ள

7. திடுக்கிட்டுக் கம்சன் தேரிப்பின்னோடி வந்து
வெடுக்கெனப்பற்றியே வீசினன் குழந்தையை

8. வீசிய் குழந்தை விண்ணினிற் காளியாகி
கூசாதுரைத்தது கொற்றவா வெனக்கூவி

9. உனேக்கொல்லும் மாயன் ஒளித்து வளருவான்
எனேக்கொல்லலாகாது ஏகுமேறன் சாவாயுண்மை

10. அந்தரத்தில் மாயை வரைந்கேகக் கேட்ட கம்சன்
சிந்தை நைந்துருகியே தேடினன் பல சூட்சி.

போது, கதையின் சேர்க்கை.

இராகம்—சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

அயர்ந்த யசோதை முதல் விழிக்க கிருஷ்ணன்
அழலானர் குவா குவா வென்று அங்கு (அய)

அநுபல்லவி.

உயர்ந்த இனிமைக்குரல் ஊரெங்கும் கேட்டிட
ஓடிவந்தா ரெல்லோரும் உலகளந்தோனேக் காண (அய)

சரணம்.

பிரசவச் சடங்குகளை முடித் — தார் பெண்கள்
பிள்ளைக் கொண்டாட்டங் — கொண்டாடினர்
முரசமுடன் பல — வாத்தியம் கோஷிக்க
விரசமில்லாத நந்தர் — வேணதானம் வழங்க (அய)

பால் தயிர்குடங்கள் காணிக்கையாய் — ஏந்திப்
பார்க்க வந்த கோபாலர் — தரவும்.
ஏற்கும் நம் கண்ணனுக்கு இனிய நல் வெண்ணையென்று
ஏது குலமாதர்கள் — எங்குந் திரண்டு வர (அய)

நந்த கோபன் வந்தோரை யழைத்து — சீராய்
சிந்தை மகிழக் — கற் கண்டீந்து
பந்துமித்ர ரெல்லோரும் — பரந்தாமனை வாழ்த்தி
சந்தோஷ மிகுதியால் — சகலரும் கூத்தாட (அய)

யசோதை தாலாட்டல்.

தாலாட்டு—நீலாம்புரி ராகம்.

கண்ணிகள்.

1. சீரார் யெது குலத்தில், — செல்வத்திரு மகனாய்
ஊரார்கள் கொண்டாட — உதித்தாய் நீ கண்வளராய்

2. நாடெங்கும் செழிக்க, நற்குண முடையோர் தாம்பூஜிக்க
வீடெங்கும் கோஷிக்க, — விண்ணமுதே கண்வளராய்

சேடியர் தாலாட்டல்.

வேறு

1. நந்தகோபன் மகனாக — நாட்டிலுதித்த பெம்மானை
சிந்தை மகிழ்வித்த — சீராளா கண்வளராய்

2. ஆயர்குலமாது — சேயாள் யசோதைக்கு
மாயமாய்த் தான் பிறந்த — மணிவண்ணா கண்வளராய்

கிருஷ்ணன், பாலலீலை.

இராகம்—மத்யாமவதி, ஆதிதாளம்.

பல்லவி,

பாலகிருஷ்ணன் விளையாட்டை பாவையரே பார்ப்போம் வா (பால)

அநுபல்லவி.

சீலன்முகம் நோக்கி சிரித்து யிங்காவெனும் (பால)

சரணம்.

அத்தா அத்தா வென்று அழகுகைகளை வீசி
இத்தா இத்தாவென எட்டி யுதைத்தலையும் (பால)

பாச்சி யாச்சி சோச்சியென பகரும் மழலைச் சொல்லும்
நாச்சி யசோதைமீது தண்ணித்தாவும் கண்ணியமும். (பால)

இராகம்—தேசிகதோடி, ஆதிதாளம்.

கண்ணிகள்.

1. ஜிலு, ஜிலு, ஜிலு, ஜிலு, ஜிலு, வென சத்தங் கேட்கவே
கிருஷ்ணன், சாயக்கொண்டை தானசைய தவிழ்ந்து வருகவே

2. பள, பள, பள, பள, பளவென, பதக்கம் மின்னவே
கிருஷ்ணன், பால் கரக்கும் வேளை தன்னில் பக்கம் நிற்கவே

3. சல, சல, சல, சல, சலவென, தயிர்கடையவே கிருஷ்ணன்,
தாழி வெண்ணையை தாவென்றேந்தி தட்டி மரிக்கவே

4. மினு, மினு, மினு, மினு, மினுவென திலகம்மின்னவே
கிருஷ்ணன் முகத்தில் கள்ள சிரிப்பும் சேஷ்டைமுதியோர்
[மகிழவே.

5. ஓடி, ஓடி ஊரெங்கும் சுற்றி தட்டம் பிடிக்கவே
உள்ளேவரவும் உரலுடன் கட்ட யோசனைசெய்தாள்

6. வரிந்து, வரிந்து கட்டக்கயிறு குறைந்து போகுதே
கிருஷ்ணன் மாயனுரலில் கட்டுப்பட்டு மயங்கிநிற்கவே

7. மட, மட, மட, மட, மடவென மரங்கள் சாயவே
அதிலிரண்டு நளகோபுருள் சாபந்தீரவே.

ஹாஜமைன டெங்கிசைய்யா, மெட்டு.

பல்லவி.

பாலகிருஷ்ணன் லீலை செய்ய பாலர்களுடன்கூடி ஜோடியாய். (பா)

அநுபல்லவி.

கோலாகலமாய் குதித்துக் குதித்து
கோபிமார்களைத் தாவி இகழ்ந்து (பா)

சரணம்.

காலிற் சிலம்புகள் கலீர் கலீரெனக்
கைவளையல்கள் கணீர் கணீரென
நால்வர் மத்தியில் நடனமாடியே
நங்கைமார்களை நகைத்து ஓடியே. (பால)

கோபியர், சொல்லுதல்.

பார்வதி வர்னமெட்டு

பல்லவி

கண்ணன் வரும் நேர்த்திகளை கண்ணுற்றுப் பார்சகி மணி
வண்ணனைப் பிடித்து நீ வரு வாயிப்போ (கண்)

அனுபல்லவி

எண்ணமெல்லாம் கொள்ளை கொண்டான்
திண்ணமாகத் தெருவில் வருகின்றான்
வெண்ணைத் தாழிகொண்டு வீதிதனில் வரும்
விந்தைகளை யெல்லாம் பாராய் (கண்)

சரணம்.

பாலர்களுடனே சேர்ந்து கிருஷ்ணன்
பாவையர் மனையில் புகுந்து வெகு
கோலாகலமாய் பால் தயிரைக் கொள்ளை
கொண்டு வருகின்றான் பாராய் (கண்)

கையில் நெய்குடத்தை யெடுத்து; கண்ணன்
ஐயமில்லாமல் அலைகின்றான்
பையவே சென்று மெய்யனைப் பிடித்து
பாவையே என்முன் வருவாய் (கண்)

இந்திர நீலமோ இவன் தேகம்
என் மனதைக் கவரும் அவன் நேத்ரம்
செந்தாமரை கண்ணனும் சிங்காரமாகப்
புன் சிரிப்புடன் வருகின்றான் பாராய். (கண்)

இராகம் கல்யாணி தாளம்—ரூபகம்.

கள்ள கிருஷ்ணன் ஓடிவாறான் அதோ
கல்யாணி நீ யெட்டிப்பாராய்
கரமதில் வெண்ணை தன்னை
களவு செய்து கொண்டு வாறான். (கள்)

பைரவியாள் வீடுபுக்கி கிருஷ்ணன்
பாற்குடத்தைத் திருடிவாறான்
பையவே சென்று நீ பிடித்து
பாவையே என் முன் நீ வாராய். (பைர)

தந்யாசியாள் வீடு நுழைந்து கிருஷ்ணன்
தயிற்குடத்தை யெடுத்துவாறான்,
தயவில்லாமலங்கு சென்று
தாதியரே கொண்டு வாரீர். (தன்)

ஆரபியாள் மனை சார்ந்து கிருஷ்ணன்
அனர்த்தங்கள் செய் திதோ வாறான்
பேரரவம் மீதில் பிரேமையாய் நடித்த
பேய்முலை யுண்டானைப் பிடித்திங்கு வாராய். (ஆர)

நீலாம்புரியாள் வீடு சேர்ந்து மாயன்
நெய்குடத்தை யுருட்டிவாறான்
நேரிழையாளே நீ சென்று
நேமியானைப் பிடித்து வாராய். (நீலா

இந்துஸ்தான் மெட்டு.

பல்லவி.

ஆரடி இங்கு திருடுகின்றவன் பாரடி சகியே. (ஆ)

அநுபல்லவி.

கூறடியவன் பேர்களை நந்தகோபாலனே சொல்வாய். (ஆ)

சரணம்.

பண்டை நாள் தயிர் பாண்டமே
பாவி, மாமி கண்டால் சண்டை செய்வாளே
தண்டத்தால் பாண்டத்தை தாட்சண்யமன்றி யுடைத்தவன் (ஆ)

மாதவன் செய்த சூதுகள் மாது யானென்றறியேனே
தீதுகள் விளைந்திடும் தீவினைக் கென்செய்குவோன். (ஆ)

யாவரு மிங்கு வந்திடார் என் கோபத்திற்குமுள்ளாகிடார்
தேவர்கள் போற்றிடும் மூவருக்கும் முதல்வனே. (ஆ)

இராகம்—அடாணா. ஆதிதாளம்.

பல்லவி.

ஆஹா ஆகட்டும் ஆகட்டும் கள்ள கிருஷ்ணா. (ஆ)

அநுபல்லவி.

போகட்டு மென்றுநான் பொறுத்தேன் பொறுத்தேன்
போகிறே னிப்பொழுதே தாய் யசோதாவிடம். (ஆ)

சரணம்.

வெண்ணெ களவுண்ட வேணுகோபாலனே
வேடிக்கையோ நல்ல வேடிக்கைதானிது
கண்ணை யுருட்டியே கவுட்டுடன் விழிக்கிறாய்
கண்டுகொண்டே னிப்போ கள்வனே பொறுபொறு. (ஆ)

தயிர் களவுகண்ட தாமோதரா வுன்னை
தயவுபாராமலே தண்டிக்கச் செய்கிறேன்

மயிர்க்கொழுந்துமரு மாமலர்சூடியே
மாதர்களையெல்லாம் மயக்கிகீ யோடியே. (ஆ)

கிருஷ்ணன் பதிலுரைத்தல்.

ஸ்ரீராகம். ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லுவீர் போ, போடி சுருக்காக வோடி. (சொ)

அநுபல்லவி.

அல்லலுக் கென்றெனை ஆளாக்க வெண்ணியே
அநுக்கு பிலுக்குடன் அரிவையே சென்றீர். (சொ)

சரணம்.

கூடியே ஜோடியாய் கோபியரே யோடி
நாடியென் தந்தை நந்த கோபாலரைத் தேடி. (சொ)

மங்கையாய் சேர்ந்துமே மங்கையரே சென்று
எந்தனன்னையான யசோதையிடம் நின்று. (சொ)

இஷ்டம்போல் நீங்களும் ஏராளமாக வென்
துஷ்டத்தனங்களெல்லாம் ஓதாகையரே விண்டு. (சொ)

கோபிகளுரை.

காவடிச்சிந்து மெட்டு.

கண்ணிகள்.

கிருஷ்ணன் செய்த லீலைகளைக் கோபிமாரே
கேட்கவேணும் சொல்லுகிறேன் கோபிமாரே

நந்தனர் மைந்தனடி கோபிமாரே
அவன் நவநீத சோரனடி கோபிமாரே

யசோதா பாலனடி கோபிமாரே
எதுகுல திலகனடி கோபிமாரே

பூதனையைக் கொன்றவண்டி கோபிமாரே
பூலோகத்தை யாள்பவண்டி கோபிமாரே

பாலக னுறங்கும்போது கோபிமாரே
பக்கத்திலே வந்துநின்றான் கோபிமாரே

குழந்தையைத் துடையில் கிள்ளி கோபிமாரே
கோபால கிருஷ்ணன் சென்றானடி கோபிமாரே

நாள்தோறும் செய் துஷ்டத்தனம் கோபிமாரே
நாம் சகிக்கக் கூடவில்லை கோபிமாரே

தாயாம் யசோதாவிடம் கோபிமாரே
தண்டிக்கச் சொல்லுவோம் வாரீர் கோபிமாரே

வேடிக்கையாய் ஒன்று சேர்ந்து கோபிமாரே
வேகமுடன் சொல்வோம் வாரீர் கோபிமாரே.

கிருஷ்ணன் பதிலுரைத்தல்.

இராகம்—அடாணா, தாளம்—ரூபகம்.

பல்லவி.

மங்கையே போயுரைப்பீர் உங்கள்
மனதி லடைந்ததோர் மாச்சர்யங்களை எல்லாம் (மங்)

அநுபல்லவி.

சங்கை கொள்ளாமலே சகலரும் சேர்ந்துமே
உங்கள் கோள் தன்னையே உரைப்பீர்கள் தப்பாது (மங்)

சரணம்.

மைந்தன் நான் செய்திடும் வம்பு தெம்புகளெல்லாம்
சந்தேகமில்லாது சாற்றுங்கள் தாயிடம்
விந்தையாம் வேடிக்கை ஜோடிப்பேன் மென்மேலும்
முந்துங்கள் பிந்திடும் முடுக்கை நான் காட்டுறேன். (மங்)

கோபியர், யசோதையிடம் முறையிடல்.

இராகம்—மோஹனம், ஆதிதாளம்.

பல்லவி.

தாயே யசோதா கேளம்மா உன் மகன் செய்தி (தா)

அநுபல்லவி.

நீயே நியாயம் சொல்லு நின் மகன் சேஷ்டைக்கெல்லாம்
வாயேன் உங்களுக்கென்று வஞ்சக மினிச்சொல்லாது (தா)

சரணம்.

பாலர்களுடன் கூடியே எங்கள் பால் தயிரைத் திருடியே
ஜாலமிகச் செய்கிறான் க்ஷணத்தில் பிரமிக்க நாங்கள்
கோலாகலன் குதித்து குறும்பாய் பிடிபடாது (தா)

காலையிலெழுந்து கண்ணன் கதவுகளை வேலையாய்த்திறந்து முன்னம்
மாலையிட்டவன் போல லீலை வார்த்தைகள் பேசி
சேலைதனை யிழுத்து சிரித்துமே போகிறான். (தா)

யசோதை, கிருஷ்ணனுக்குப் புத்தி கூறல்.

இராகம்—கேதார கௌளம், தாளம்—ரூபகம்.

பல்லவி.

ஆயர்மனையில் தானே புகுதல் நியாயமாமோ கிருஷ்ண
[சொல்வாய் (ஆய)

அநுபல்லவி.

வாயில் வந்த வாறு பேசி, வாயிலில் கூடி மானங்குலைய (ஆய)

சரணம்.

ஆடைத் தயிரும் அன்று வெண்ணையும்
அப்பனே நான் வைத்திருக்க
அடுத்த வீடு சென்று நீயும்
திருட்டுத் தனங்கள் செய்வதாகுமோ

திருடனென்றும் முறட்டனென்றும்
திட்டுறார்கள் கோபிகளெல்லாம் (ஆய)

காய்ச்சின பாலும் கனியுடன் பட்சியம்
கண்ணனே நான் வைத்திருக்க
ஆச்சியர் மனை நுழைந்து நீயும்
அடுக்காமுறைக் கணுகலாமோ
பேச்சி முலையுண்டதாலே போயிற்றே
உன் நன்மதியும் (ஆய)

கிருஷ்ணன் பதிலுரைத்தல்.

இராகம்—கமாஸ் சாப்புதாளம்

கண்ணிகள்.

தையலிக் கோபிகள் சொல்லு மொழிகளை
சற்றேனுங் கேளாதே நீயம்மா சும்மா
சிறு, பையனென்று யென்னைப்
பார்த்துக் கொண்டு மெத்தப்
பாசாங்குடன் என்மேல்
பழிசுமத்து ராரம்மா (தை)

வெண்ணை திருடியே உண்டதும் நானில்லை
வீண் பழி ஐயையோ சொல்லுறார் அம்மா
கண்ணன் தானே யென்று கண்டபடி பேச
எண்ணங்கொண்டு வந்தார் திண்ணக்கமாயம்மா (தை)

அன்னையே நான் அரை நாழிகையாகிலும்
உன்னை விட்டகன்றதும் உண்டோ, சொல்
என்னைத் தவறிக்கண்டால் இடும்புகள் பேசியே
ஏசுறார் பாரம்மா கூசாது கைவீசி (தை)

பாலுந்தயிரும் நம் பாண்டத்திலில்லையோ
பசப்புராருன்னையே லீலிகள் பாரம்மா
ஜாலக்காரி இவள் ஜோலிக்கேனும் சற்று
கேலிக்கும் நான் போக வில்லை இல்லையம்மா (தை)

போர்துப் பாட்டு.

பார்சி மெட்டு

பல்லவி.

உறியிலுள்ள தயிர் பால் வெண்ணையை
உள்நுழைந்து திருடலாகினான் கிருஷ்ணன் (உ)

அநுபல்லவி.

அறியாத சிறுவரோடு ஆடிப் பாடிக்கூடி ஜோடியாய்
ஆருமில்லாத வீடு தேடிப் புகுந்தே (உ)

சரணம்.

குரங்குடன் பூனை நாய்க்கு மீந்து
குதித்துக் குதித்துக் கொண்டா னடித்துமே
உறங்கும் கோபி கோபாலரின்
உச்சி மயிரை ஒன்றாய் முடித்து
கரங்கள் கொட்டியே
கண்டோர் களித்து நிற்கவே (உ)

கண்டு கொண்டால் கோபிமார்கள்
களிப்புடன் வெண்ணை யவர் வாய்பூசியே
செண்டு போலத் துள்ளிக் குதித்து
சிரித்து ஓடியே வெளியிலேக
உண்டாள் இவளென
மாமி உறுமி திட்டவே. (உ)

கோபியர் பின்னும் முறையிடல்.

இராகம்—அடாணா, ரூபக தாளம்.

பல்லவி.

கேளடி யசோதா அம்மா கிருஷ்ணன்
கெர்வமுடன் யெங்கள் வீட்டில் செய்த தீம்பை (கே)

அநுபல்லவி.

கோளடி யென்றெம்மை கூறுதலாகாது
கோபாலன் செய்கின்ற குறும்புகள் ஒன்றொன்றாய் (கே)

சரணம்.

பாலர்க ளுடனே கூடி வருகின்றான்
பால் தயிரை யெங்கும் தேடித் திரிகின்றான்
பூனை குரங்கிற்கு புனிதமாய் ஈகின்றான்
பூவையர் கண்டிட்டால் ஓட்டம் பிடிக்கின்றான் (கே)

எட்டாததுறிகளில் வைத்த பால் சட்டியை
தட்டியே கோலாலே தானும் குடிக்கிறான்
இஷ்டமுடன் பையன் எல்லோர்க்கும் கொடுக்கின்றான்
என்னைக் கண்டால் கண்ணன் எகத்தாளி செய்கின்றான். (கே)

யசோதை, கோபியர்களைக் கோபித்தல்.

ஜடி மெட்டு.

பல்லவி.

என்னடி பெண்ணுமற் பேசுறீர் உங்களுக்
கேற்றபடி யெல்லாம் வீசுறீர் போங்கடி (எ)

அநுபல்லவி.

கண்ணன் பெண்ணைவிட்டுக் கணமும் பிரிந்ததில்லை
காதகிகளே யென்ன பாதகம் சுமத்துறீர் (எ)

சரணம்.

பால கிருஷ்ணன் நேற்றுப் படுத்துறங்காமலே
பட்ட கஷ்டமெல்லாம் பாவை நானறிவேன்
நீலித்தனமாக நிஷ்டூரம் பேசுறீர்
ஜோலிதானில்லையோ சும்மாயேன் வருகின்றீர் (எ)

ஆணுவமில்லாத புருஷன்கிழ் பெண்டீரோ
அலைகின்றீர் நன்றாக அடுக்குமோ தெருவழி
வேணுமென்றே களவு வீணாய் சொல்லவந்தீர்
வேசிகளைப்போல கூசா தாடுகின்றீர். (எ)

கோபியர், பதிலுரைத்தல்.

இராகம்—இந்துஸ்தான் காப்பி, ஆதிதாளம்.

பல்லவி.

அம்மா உமக்கிதுவும் நியாயமா எம்மை
அடுக்காத வார்த்தைகள் சொல்லி துடுக்காக பேசுவதும் (அ)

அநுபல்லவி.

திருட்டுத்தனம் கற்றவனை தேவியே நீ பெற்றுவிட்டு
விரட்டிமிக அரட்டியிப்போ முறட்டுத்தனம் பேசுவதும் (அ)

சரணம்.

மாயவனைப் பெற்றெடுத்த தாயே யசோதாவே இந்த
மங்கையர்மேல் சங்கைகொண்டு இங்கிதமன்றிப் பேசுறீர் (அ)

ஆதிமுதல் உந்தன்மகன் அக்ரமங்கள் செய்தொழிலை
நீதியுடன் சொல்லவந்தால் நிஷ்டூரமாய் நிந்திக்கின்றாய் (அ)

நியாயங்கள் கிடைக்குமென்றுன் வாயிலையே நாடிவந்தோம்
நியாயமன்றிப் பேசலுற்றீர் தாயேநாங்கள் போய்வருவோம். (அ)

யசோதை, கிருஷ்ணனைக் கண்டித்தல்.

இராகம்—இந்துஸ்தான், ஆதிதாளம்.

கண்ணிகள், தர்க்கம்.

கண்ணா நீ இங்கேவாராய் என் கவலைகளெல்லாம் தீராய்
மணி வண்ணனே சீராய் வழங்குவாயென்னேராய்
உண்மைகளைத் தாராய் ஓடிடவே கோறாய் (க)

அம்மாநானொன் றறியேனே அநியாயம் சொல்லுறாள் தானே
அம்மா வுன்னைவிட்டு அகன்றதில்லை கெட்டு
சும்மாவந்து திட்டு தொடுக்கின்றார்கள் பட்டு (அ)

அண்டைவீடுகள் சென்று தயிர் பாண்டங்களையுடைத்து
சண்டைகள் செய்வது சரியோ வுனக்கிது
பெண்டுகளும் வந்து [illegible] கிறவதோ நன்று (க)

பெண்டுகளெல்லோரும்வந்து பெரும்பழிகள் சொல்வதும்வம்பு
மண்டலத்தினுள்ளே இப் பெண்டுகளைப்போலே
அண்டைவீடு வந்து சண்டைசெய்வா ருண்டோ (அ)

பிள்ளையில்லாமல் நானே பெருந்தவங்கள் செய்து பெற்றேனே
கள்ளனென்று உன்னை கன்னியர்கள் தூற்ற
உள்ளங் கரைந்திங்கு உருகியே நான்வாட (க)

பர்த்தாசொற்கேளாத நீலி பத்துசத்தியங்கள் செய்வாள் ஜாலி
இவ் வுத்தமிகள்வார்த்தை உண்மையென் றெண்ணாதே
சித்திராங்கி இவர்போல் ஜெகத்திலெங்குமில்லை (அ)

கோபியர், பின்னும் முறையிடல்.

காவடிச்சிந்து மெட்டு.

கண்ணிகள்.

மாதே யசோதையே உன்மகன் செய்தியை
ஏதென்று சொல்லுவோ மம்மா
சுத்த வம்பனென் றஞ்சி யொதுங்கினாலும் வந்து
வாதுக்கழைக்கின்றான் சும்மா.
மாயத்தொழிலாலே மிகவே பெற்றுவிட்டானே யடி
மடவார் குழல் வளர்கோபிகள் தெருவீதியில் வரநீதமோ (மா)

பட்டிக் கதவைத் திறந்துவிட்டுக் கன்றுக்
குட்டி பாலூட்டுது என்பான் எங்கள்
பர்த்தாக்களோடிப் போய் பார்க்கும்போ தெங்களை
முத்தமிட்டோடிப் போகின்றான் சிறு
பாலன் செய்யும் மாயேந்திர ஜாலங்களிலே மூழ்கிய
பதினாயிரம் மடவார்களில் எவர்தான் நிலை தவறாதவர் (மா)

ஏரான பொய்கையில் தோழிமார்களுடன்
நீராடுகின்றதைக் கண்டான்.
எங்களுடைகளெல்லாம் எடுத்துக்கொண்டு
அங்கோர் மரமேறிக் கொண்டான் (மா)

இசை வேய்ங்குழல் ஓசைப்படத்
திசை நாங்கள் கண்ணுலுற்றிட
எமதாடைகள் கிளைதோறொரு விதமேவிட
யவன்மாட்டினன் (மா)

காவடிச்சிந்து வேறு மெட்டு.

கேளடி யசோதா நீ யம்மா உங்கள்
கிளை தழைக்க வந்துதித்த கிருஷ்ணன், வெகு
கெர்வமுட னெங்கள் வீட்டில் உறியில் வெண்ணை பாலை
[யுண்டான் சகியேனே

குடத்தில் வைத்த நெய்களை யெல்லாம், இவன்
கொள்ளையிட்ட கள்ளனுகையாலே, நாங்கள்
கொட்டிவிட்டோம் என்றெங்களை திட்டுகிறாரே கணவர்
[மயிலே அடிகுயிலே

தண்டை சத்தம் கேளாமலே யம்மா, எங்கள்
அண்டையிலொளித்து வந்து கிருஷ்ணன், சொந்த
அத்தை தோளின் மீதிலேறி வைத்த தயிர் பாலையுண்டான்
[நானே என் செய்வேனே.

யசோதை, கிருஷ்ணனைக் கண்டித்தல்.

ராமநாம பஜனம்மெட்டு.

பல்லவி.

துஷ்டத்தனமேனோடா தோகையரிடம் (துஷ்)

அநுபல்லவி.

கஷ்டத்திற்குள்ளாக்கியதாய் கன்னியர்கள் சேர்ந்துமே
பட்டபாட்டைச் சொல்லுகின்றார் பாலகனே யீதேண்டா
கெட்ட செயல் வேண்டா மென்று
கெஞ்சிக் கொஞ்சி நான் சொல்லியும் (துஷ்)

சரணம்.

காலை மாலை வந்து நொந்து கத்துறாரே பார்த்தாயா
சேலையைத் திருடிப் பாலை பங்கிட்டுக் கொடுத்தாயா
வேலையுனக் கில்லாததினால்
விளையாட்டெனச் செய்தாயா (கிஷ்)

கிருஷ்ணன் சொல்லல்.

நொண்டிச்சிந்து மெட்டு.

பொல்லாத கோபிமாரம்மா—இவர்கள்
இல்லாத வார்த்தைகளைச் சொல்லுறாரம்மா (பொ)

இருட்டினில் உறியெட்டுமா—இவர்கள்
உருட்டுக்கும், பிறட்டுக்கும் சரிக்கட்டுமா

வெண்ணை தானிக்கில்லையா?—இவரின்
ஊத்த நாற்ற வெண்ணை தேடியுண்ண வேணுமா

பொய் சொல்ல அஞ்சார்களம்மா—இவரின்
பொட்டை மிரட்டிலொன்றும் செல்லாதம்மா

வெண்ணை யிங்கு கிடையாதோ—தங்கக்
கிண்ணியிலே நீ தந்த வெண்ணை போதாதோ

பால் தயிர் நமக்கில்லையா?—இந்தப்
பாவையர்கள் சொல்லுமொழி கேளாதேயம்மா (பொ)

பின்னும் கோபியர் முறை.

வங்கார மார்பிலணி மெட்டு.

கண்ணிகள்.

அம்மாவுன் மகன் செய்யும் அநீத மறிவித்தால்
சும்மா நீ பலவாறாய் தூஷித்துமே கூறுகின்றாய்
இம்மானிலந்தன்னிலே எங்களுக் கிருப்புமில்லை—அருள்வாயே

நஷ்டமடையப் பலர் நாட்டினில் எல்லோருமிக
கஷ்டப்படவோ வென்று துஷ்டப்பிள்ளையை நீ பெற்றாய்
இஷ்டப்படியும் ஏசி நிஷ்டூரமும் பேசுகின்றாய்—நியாயமா

அருமையாம் குழந்தையை நீ பெருமையா யடைந்ததினால்
தருமங்கள் தவறியே நீ தாறுமாறாய் பேசலுற்றாய்
வருமங்கள் கூறிமிக வார்த்தைகளும் சொல்லவில்லை—நீனைப்பாயே.

தாயே உன் கிருஷ்ணன் செய்த தந்திரங்கள் சொல்லவந்தால்
நீயே எமை நம்பாது நிந்திக்கவும் தலைப்பட்டாய்
வாயைத் திறக்கயினி வகையுமில்லை எங்குசெல்வோம்—இனிமேலே.

யசோதை கிருஷ்ணனைக் கன்றுகளை மேய்க்க அனுப்புதல்.

விருத்தம்.

பெண்டுகளெல்லாம் கிருஷ்ணன் பிழைதனை யெடுத்துச் சொல்ல
கண்டனள் யசோதை தானும் கண்ணனை யழைத்து மப்போ
செண்டுகளாடிக் கன்றை செழித்திடும் வனத்தில் மேய்த்து
கொண்டலின் வண்ணவாறாய் கோபியர் கண் முன்னாலே.

கிருஷ்ணனை அனுப்பிய யசோதை வருந்தல்.

இராகம்—மாத நாமக்கிரியை. ஆதி—தாளம்.

கண்ணிகள்.

கண்ணாஉன் கால்கள் நோக கரிய திருமேனி வாட
எண்ணாதுனைக் கன்று மேய்க்க எனனுப்பினேனோ பாவி

அயலார் சொல் சகிக்காமல் அன்புள்ள யென் கண்மணியை
வெய்யிலி லலையவிட்டு வேதனைக்குள் ளாகினேனே

தண்டை சிலம்பணிந்த தாளின் சத்தம் கேட்காமலே
வண்டுகள் மொய்த்த காட்டினிற் என் வண்ணனை யனுப்பினேனே

அருந்தவத்தினால் பெற்ற என் அகத்துள் சிகாமணியை
பெருமை குன்றவே இந்தப் பேதையு மனுப்பினேனே

குடையும் செருப்பில்லாமல் குழந்தையைப் போவென்றேனே
இடையர் பிள்ளைகளுடன் என் செல்வமும் நடப்பானோ

கன்றுகள் பின் தொடர்ந்துமே கானகமெல்லாந் திரிய
இன்று உனக்கென்றன் கண்ணே எமனாகத் தோன்றினேனே

மழைகள் காற்றுகள் வந்தால் மலங்க நீ விழிப்பாயே
குழந்தை யுனை யனுப்ப இழந்தேனே என் மதியை.

கோபியர், கோபாலர் பாடுதல்.

இராகம்—சஹானா, தாளம்—ரூபகம்.

பல்லவி.

கன்றுகள் மேய்த்துவரும் கண்ணன் வடிவழகை
கண்டு நாம் சேவிப்போம் வாரீர் (கன்)

அநுபல்லவி.

அன்று அமுதளித்து அமரர்களைக் காத்தோன்
இன்று நம்மை ரக்ஷிக்க எழுந்தருளும் பிரபு (கன்)

சரணம்.

பாலனாகவே வந்து பாரிலவதரித்த
நீலவருணக்கண்ணன் நித்யானந்த மூர்த்தி
பாலர்களுடன் சேர்ந்து பசுங்கன்றுகளை மேய்த்து
கோலா கலமாய்வரும் கோபால கிருஷ்ணனிப்போ (கன்)

ஆசைக் குகந்தபாலன் ஆனந்த குணசீலன்
கேசவ வாமனன் கிருபா பயோநிதி
பாசந் தனையறுத்து பாவந்தனைப் போக்குவன்
தாஸன் ஸ்ரீநிவாஸனை தற்காக்கும் மணிவண்ணன். (கன்)

போர்துப் பாட்டு.

இராகம்—கேதாரம் ஆதிதாளம்.

பல்லவி.

பாலன் வருவதைக்கண்டு யசோதை
பகர்ந்து மகிழ்ந்தனளே ஆவலுடன் (பா)

அநுபல்லவி.

லோலனம்புரி ஆலிலைப்பாலன்
சீலமுடன்வரும் சிறப்பினைக் கண்குளிர (பா

சரணம்.

முத்தென வேர்வைகள் முகத்தினில் தோன்றிட
முன்னம் மயிர்களும் முறண்டு பிரண்டாட
எத்துக் கள்வனும் வந்தான் வந்தானென்று
இடைச்சிமார்களும் துடர்ந்து பின்வர (பா)

பங்காரிமோரி, மெட்டு.

பல்லவி.

கண்ணனே மணிவண்ணனே இங்கே வா, வா கண்மணியே (க)

அநுபல்லவி.

கண்ணனே உன்னை நான் கானகம் போகவே
என்னத்தில் எண்ணாது யேவினேனே முத்தந் தா தா
[கண்மணியே (க)

சரணம்.

கன்னியர் வார்த்தைக்கு என்னை மறந்துமே
உன்னை யனுப்பிய அன்னை தன்னை வந்து கார்கார் கண்மணியே (க)

இராகம்—மத்யமாவதி.

பல்லவி.

கண்ணு யென்கட்டிமுத்தே வாராய் முத்தந்தருவாய் (கண்)

அநுபல்லவி.

கண்ணுஉனை நினைந்து கவலைமிகவே யெண்ணி
புண்ணாகி நொந்து மனம் பொழுது போக்கினேன் கிருஷ்ணு (கண்)

சரணம்.

ஆடையாபரணங்கள் அணிந்துன்னைப் பாராமல்
காடு வனங்களெல்லாம் ஓடும்படிச் செய்தேண்டா (கண்)

அஞ்சன வண்ணனை அலைந்த ஸ்ரமந்தீர
திருமஞ்சனம் கொண்டு வைத்தேன் மகிழ்ந்துநீ நீராடுவாய்(கண்)

காலையிலெழுந்து நீ கன்றின்பின் போகவேண்டாம்
கோலம் செய்து வைப்பேன், கோவிந்தா வென் செல்வமே (கண்)

கோபியர் சொல் விருத்தம்.

மாது யசோதா முன்பு மணிவண்ணன் மீதில் நாமும்
வாதுடன் கோளுரைக்க வஞ்சியும் தடுத்ததாலே
யாதவர் குலத்துதித்த மாதவன் வரவைக் காணோம்
ஏதினிச் செய்வோமென்று ஏங்கியே புலம்பலுற்றார்.

இராகம்—இந்துஸ்தான், ஆதிதாளம்.

பல்லவி.

என்ன நான் செய்குவேன் அடி சகியே
இன்னம் வரக்காணேனே ஏங்கவுமாகினேனே (என்)

அநுபல்லவி.

மன்னன் கோபாலன் வராமையால்
மனம் வாடினேன் பதைத் தோடினேன்,
எங்கும் நாடினேன் அலைந்து தேடினேன் (என்)

சரணம்.

பன்னக சயனன் பாதசேவை காணமல்
பதறினேன் கதறினேன்;
அலறினேன், மனம் சிதறினேன் (என்)

கேசவன் சேவைநேராமல் ஆசைகொண்டு
அலைந்தேன், நாடெங்குந் திரிந்தேன்,
வீடெங்கும் நுழைந்தேன் மனம் நொந்தேன் (என்)

பக்தன் ஸ்ரீநிவாஸன் பணியும் பரமானந்தன்
உத்தம நந்தமைந்தன் முக்தியளிக்கும் நித்தியாநந்தன்,
சிந்தை கலங்கச் செய்தான் கண்ணன் (என்)

இராகம்—எதுகுல காம்போதி, ஆதிதாளம்.

கண்ணிகள்.

எங்கு சென்று தேடுவேனன் எனது கண்ணபிரானை
அங்கு மெங்கும் தேடினாலும் அன்பனைக் காணகிலேனே.

பாரெங்கும் சீர்புகழ் பெற்ற பரம கிருபாநிதியை
ஊரெங்குந் தேடி யலைந்தும் உத்தமனைக் காண்கிலேனே.

யசோதையின் பாலகனை எதுகுல திலகனை
பாசமோடெங்குந் தேடியும் பரந்தாமனைக் காணேன்.

ஆசையெனும் பந்தத்தாலே அலைந்து கால்களும் தேய்ந்தேன்
ம்நசந்தனை எண்ணி யெண்ணி நினையும் பித்தம் பிடித்தேன்.

வெண்ணெ பால் தயிரோடு வேணதெல்லாம் உந்தனுக்கே.
கண்ணனே நான் தந்திடுவேன் காட்சியை எனக்களிப்பாய்.

இராகம்—தேசிக முகாரி.

கண்ணிகள்.

வேணுகானம் செய்தார் கண்ணன் வேதங்களும் பின்நிற்கவே
காணோமென்று தேடி நொந்த கன்னியர் கோபிகள் வர (வே)

கண்ணன் வேணுகானம் கேட்டு கன்னியர்செய் வேலை விட்டு
உண்ணலும் மறந்து சிலர் ஓடினார்கள் தேடி யிசை (வே)

சின்னஞ் சிறு குழந்தைக்கு சீருடனே பால் கொடுத்த
கன்னியர்க ளிசை கேட்டு கானத்தின் திசையோடினர் (வே)

பாலகன் பசித்து வந்து பற்றிக் காலைச் சுற்றியழ
சிலனிசை கேட்ட கோபி சிந்தையேகத் தான் பின்போக (வே)

நீலவர்ணக் கண்ணன் மீது நினைவாம் மோஹத்தினாலே
பாலடுப்பில் பொங்கையிலே பறந்தா ளிசையை நோக்கி (வே)

காலிலிடும் பூஷணத்தை கைதனி லணிந்துகொண்டு
சேலை யவிழ்ந்து நழுவ சிந்தியாது சென்றாள் மாது (வே)

மல்லிகை முல்லை ஷெண்பகம் மலரை முடிக்குமாது
மாதவன் குழலோசையால் மலர்விழச் சென்றாள் மணி (வே)

கணவன் பசித்துட்கார உணவிடும் கோபிகாதில்
குணமாம் இசை நுழைய, கொண்டானிட்டோடினாள் வல்லி (வே)

மேகம்போல் நிறத்தை யொத்த, மோகனுங்கனை நினைந்து
பாகுபோ லுருகிமனம் வேகமாய் தேடியே சென்ருர் (வே)

உன்னித ரூபம்கோபியர், உள்ளத்தில் நிறைகொண்டிட
மண், மனை, மக்களைவிட்டு மறந்தேகினர் சில கோபியர் (வே)

பிள்ளை யில்லாத பாக்கியம், மெட்டு.

பல்லவி.

சேவை கிட்டாப் பாவியானேன் இந்த
ஜென்மம் கிடைத்தும் சிந்தை யுன்மேல்வைத்தும் (சே)

அநுபல்லவி.

பாவைய ரெல்லோரும் பரந்தாமனே யுன்கானம்
பிறக்கும் திசையைநோக்கி பறந்தோடவும் கண்டு
ஆவல் யெனையிழுக்க அத்தை மாமன் கணவன்
அந்தோ காவலில் வைத்தார் அலமியும் பயனற்றேன் (சே)

சரணம்.

பசுக்கள் நிரைகள் சூழ பக்த ரடியில் தாழ
பவழ வாயின் குழ லிசையது மேலெழ
வசுக்களுடன் தேவரின் வாஞ்சை மேன்மேல் விழ
வஞ்சி நானிங்கு வருந்தி மிகவே யழ (சே)

கோபிய ருன்னுடன் குணங்க ளனுபவிக்க
கோமியே தவம் நோன்பு குறை வின்றிச் செய்தாரோ
என் ஆவியுன்னுடன் சுற்ற அலையும் சடலம் பெற்ற
அநித்யத்தி லகப்பட்ட அரிவைக் கிறங்கும் கிருஷ்ணு உன் (சே)

சென்று கனி பரித்து, மெட்டு.

கண்ணிகள், ஆதிதாளம்.

நாட்டிஉள்ள பெண்களே கூடி நன்ருக வந்திரிங்கு ஓடி போவீர்
வீட்டினில் உள்ளோர்கள் தேடி, வீதி பார்த்து வருமுன் நீங்களோடி
வளையினி நாடி வதனங்களை மூடி
வனிதையரே பாடி, வருந்தும் கணவருடன் ஜோடி, கூடும் (நாட்)

ஏதடி, உங்களுக் கிந்தத் தெம்பு
ஏற்குமோடி பெண்களுக்கு வீம்பு
ஈதடி, சொல்லும் மொழியை நம்பு
இது வேதைக்குள்ளாக்கும் பெரும் வம்பு
வசைச் சொற்றைக்கு மம்பு இசைக்கு வரும் தீம்பு
ஏற்பீர் பழித்தும்பு, இனி ஏதும் மனையுமாகும் வேம்பு (ஏ)

மங்கை, மாரே யுங்களின் மதி கெட்டு
மனம்போன வழியை நீங்கள் தொட்டு
சங்கைகள் என்பதை யிங்கு விட்டு
இந்த ஸ்தானம் வந்தீர்க வீடுபட்டு
எனக்கு வரும் சொட்டு ஏற்காதுங்கட்.கு நெட்டு
ஏச்சுகள் வருந் திட்டு ஏகுவீ ருங்களின் மனைக்கட்டு

இராகம்—யமுனா கல்யாணி, ஆதிதாளம்.

பல்லவி

கிருஷ்ணா நீ சொல்வது தகாது
இந்த கேலி பரிகாசம் செய்வ தாகாது (கிரு)

அனுபல்லவி

இருளாகிய பெரும் துன்பங்களை யொழித்து
அருள் பெறவந்த யெம்மை அகற்றிப் பேசுவது (கிரு)

சரணம்.

தேக சம்பந்தமான தொந்தங்களை யொழித்து
வேகமா யுன்மலரடி விரும்பி வந்த பின்பு (கிரு)

கேசவனை யுன்சேவை கிடைத்த பின்னிதை விட்டு
பாச பந்தத்திலாசை பற்றுமோ கிருபை வைப்பாய் (கிரு)

தேவர்கட்கும் கிட்டாத திவ்ய மலரடியை
பாவை யெங்கட்குத் தந்த பரமதயாளா (கிரு)

உன்னையன்றி யெமக்கு உற்றார் பெரிதில்லை
என்ன சொன்னாலும் மனைக் கேகமாட்டோ மினிமேல் (கிரு)

ஜெப்ககலந்தர் மெட்டு.

கண்ணிகள்.

கோபியரே யென்மேல் கோபம் வேண்டாம்
குற்றமில்லை யுங்கள் குணமறிவேன்

பாவிகள் உலகில் பழித்திடுவார்கள்
பாவையரே நீங்கள் அறிந்திடுவீர்

சகல லோகத்திற்கும் இகபரனாகிய
சர்வஞ்ஞனேயுன் சரணடைந்தோம்

இகமதி லெங்களை ஏசினாலும் பலர்
ஏங்கமாட்டோம் சொல்லை வகிக்க மாட்டோம்

மங்கையரே யுங்கள் கணவனும் மாமியும்
மானங் கெடும் பேச்சால் மழை பொழிவார்

சங்கைகளாம் சொற்கள் தரணியில் பரவிட
தையலரே மிக ஏசிடுவார்

உலகத்தினாசைகள் உளமதில் தங்கினால்
உத்தமனே பாதம் சித்திக்குமோ.

நலமுடன் யெங்கட்கு நண்ணுமின்ப மளித்து
நங்கையரை யன்பாய் காத்திடுவீர்.

விருத்தம்.

கன்னியர் முறைக்கிரங்கி கண்ணனு மவர்களோடு
பன்னிசை பாடியாட பரவசமாகிப் பெண்கள்
உன்னிய பொருள் தமக்கு உற்றதாய் கெர்வங்கொள்ள
அன்னியர் தனம் கைபோல அகன்றிட்டார் கண்ணன் தானே.

நோட், மெட்டு

பல்லவி

ஆஹா ஈதென்ன ஆச்சர்யம்
அருகிலிருந்த கண்ணனைக் காணேனே (ஆ)

அநுபல்லவி.

ஓஹோ! இதன் உண்மைகள் தெரிந்தால்
உள்ளது சொல்வாய் சகிமானே (ஆ)

சரணம்.

தண்டை சிலம்புகள் சல, சல வென
சத்தங்கள் இனிக்கத் தொனிக்கவே
அண்டையி லிருந்த கண்ணனைக் கண்ட கண்
அலைந்துளைந் தெங்கும் தேடுதே. (ஆ)

துனபினமோரி மெட்டு;

கண்ணிகள்.

சந்தனம் புன்னை சார்ந்த ஷண்பகமே
சுந்திர மாயனிங்கு வரக் கண்டீரோ
சிந்தை வருந்துமேரும் சேவைதனைக் காணாது
மந்த ஹாஸனைக் கண்டீரோ (சந்)

மல்லிகை முல்லை மணமுள்ள தாழையே
மாதவன் மறைந்திட்ட மர்மம் சொல்வீர்
சொல்லினால் பலனுண்டு சுகமுறுவோம் நாங்கள்
சூக்ஷமந் தெரிய நவில்வீர் (சந்)

தென்னை கமுகே தேன் மொழி நற்பிலாவே
தேவாதி தேவன் வரப் பார்த்தீர்களோ
பன்னக சயனன் பாவையா மெங்களை
பரிதபிக்க விட் டேகினர். (சந்)

இராகம்—இந்துஸ்தான், தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

கானமெல்லா மலைந்து கலங்கி வாடினோம்
கானலோலன் மனதிலின்னம் கருணை யில்லையே

பார்த்தீர்களோ பத்மநாபன் பாத ரேகையை
நேர்த்தியான கண்ணன்சேவை நேரில் காணேனே

நான்குபாதத் தடங்களிதோ நன்றாகப் பாரு
தேனினும் இனியநாதத் தோற்றமும் காணோம்

மாதுடனே சேர்ந்துகூட மலரெடுத்துமே
மது ஸூதனனும் ஜடையில் முடித்த இடமிது பாரு

உத்தம மாதவனுடன் ஓடியோர் மாது
சித்த மகிழ்ந்துமே சென்ற சிறிடம் பாரு

கண்ணனுடன் சென்ற மாது கலங்கியே யிதோ
விண்ணவற் கமுதனையே விரும்பி நிற்குருள்

ஏதடிநீ இங்கு வந்தாய் எங்களை விட்டுமே
சூது செய்து வந்ததினால் துன்பம் நேர்ந்தது.

தார் தார மெட்டு.

பல்லவி.

ஆ என்னைத் தனிவிட்டு அகன்றிட்டாய்நீ ஸ்ரீ கிருஷ்ணா (ஆ)

அநுபல்லவி.

ஓ ஹோ இன்னலுற நானும் ஓடியெங்கொளித்தாயோ நீ (ஆ)

சரணம்.

உன்னையே நான் நம்பியே உற்றார் பெற்றாரை விட்டேன்
கன்னல் மொழி நான்பருகும் கருணை மாருந் தருணம் சேர (ஆ)

திவ்ய மலர் கொய்துமே தேன் துளிக்க முடித்த
பவ்யந்தன்னை பெண்ணா நானும் பார்த்துருக விட்டேகினாய் (ஆ)

கொஞ்சுமின்ப மொழியால் நெஞ்சில் கெர்வம் கொண்டேனே
அஞ்சனவண்ணனு மென்னை வஞ்சித்தேகும் வகைக்காளானேன் (ஆ)

மாதவனின் தயவால், மங்கையரே யுங்களின்
ஆதரவை விட்டுவந்து அந்தரத்தில் நிற்கலானேன் (ஆ)

இராகம்—தேசிகதோடி, ஆதிதாளம்.

பல்லவி.

போவோம் வாரீர் சகிகாள் புகழ் எழுனைக்கு நாம்
புருஷோத்தமன் வசிக்கும் புனிதவிடத்தை நாடி (போ)

அநுபல்லவி.

பாவை நாம் படுந்துயர் பார்த்து சும்மாவிருந்தால்
பக்தவத்ஸல னென்றும் பாரிலுரைப்பார்களோ (போ)

சரணம்.

பாழும் ஜென்மம் உலகில் படைத்தோ மெதற்கு
பரந்தாமனுடன்கூட பட்சமாய் வசிக்காத (போ)

ஏழுலகுண்டவாயன் யசோதா பாலகனுடன்
வாழும் பாக்கியமில்லாத வனிதைகள் நாமெல்லோரும் (போ)

இந்த உலகினுசை எதையும் நாம் கைவிடுத்தோம்
மந்தஹாஸவ்தனன் மாயையில் நாமடுத்தோம் (போ)

அந்தரங்கமா யவன் அழகு நாமம் பஜிப்போம்
அவனிங்கு வாராவிடில் ஆவியை நாம் முடிப்போம் (போ)

கோபிகள் தேடிவருந்துதல்.

இராகம்—வசந்தா, ரூபகதாளம்.

பல்லவி.

தேடித்தேடி நாமலைந்தோம் தீனபந்துவைக் காணுது (தேடி)

அநுபல்லவி.

வாடியும் மிகவோடியும் வஞ்சியர் நம்மீது கிருபை
நாடிடாது கண்ணனேக நங்கையர் நம்மீதென்கோபமோ (தேடி)

சரணம்.

குழலிசை கேட்கும் காது, குணங்கெட்டுச் செவிடாச்சோ
கோபாலனைப் பார்க்கும்கண்கள் குருடாகக் காணிலோமோ

அழகிய வாசுதேவன் அன்பு நம்மை விட்டேகிட
பழகுங்கால் அபசாரம் பாவையர் நாமென் செய்தோமோ (தேடி)

கோலாஹலா யெங்கள்மீதுன் குணங்கெட பிழை என்செய்தோம்
சீலா குற்றமேதாகினும் சித்தங்குளிர்ந்தாட்கொள்ளுவாய்
நீலானு வைபவத்தை நிமையும் விட்டுப் பிரியோம்
மேலானுகூலா சேவை மெல்லியற்குத்தாரும் வாரும் (தேடி)

போதுப் பாட்டு.

அமீர் கல்யாணி கன்னிகள் ஆதிதாளம்.

அந்தரங்கமாய் கோபியர் அனைவரும் சேர்ந்துமே
சிந்தை நைந்துருகியே செல்வனைத் துதித்தார்
மந்தஹாஸவதனன் மாதரின் துதிக்கு
மனமுகந்தவர்கட்கு மாதவன் சேவை தந்தார். (அ)

கண்ணனைக் கண்டதும் கன்னியர் கோபிமார்
களித்தார் துதித்தார் குதித்துமே யாடினர்
வண்ணனே யெம்மை வஞ்சித்துத்தாமேகல்
புண்ணியமாகுமோ புனிதனே உமக்கென (அ)

ஒவ்வொரு கோபியரின் உள்ளத்தில் தம்மை
உன்னியவாரதனை உலகளந்தோன் கண்டு
ஒவ்வோர் கோபியர்பக்கல் ஒவ்வோர் கிருஷ்ணனாக
உல்லாசமாய் கிரீடிக்க உதயமாய் நின்றார் (அ)

இராகம்—உசேனி. ரூபகம்.

பல்லவி.

ராஸ நடனம் செய்தார் கோபாலகிருஷ்ணன் (ரா)

அநுபல்லவி.

ஆசைகொண்ட கோபியரின் அந்தரங்கமும் களிக்க (ரா)

சரணம்.

மணல் குன்றின் மேலோர் கிருஷ்ணன், மங்களமூர்த்தியாக நின்று
வேணுகானம் செய்துகொண்டும் விந்தைவிந்தையாககிருஷ்ணன் (ரா)

அந்தரத்திலமரர்கள் அரையும் துந்துபி முழங்க
சந்திரனும் பால்போல்வீச சல்லாபமாகக் கண்ணன் (ரா)

தும்புரு நாரத முனிவர் துதித்துக் கீதப்பதம் பாட
தம்புரு தாளங்களுடனே தத்தோம் தித்தோமெனவே (ரா)

யாதவர்கள் அடைந்த பாக்யம் யார்க்குமில்லை யிந்தயோக்யம்
மாதவன் தன்மே லிச்சை கொண்ட மங்கை கோபியர் மகிழ (ரா)

வேதியர் துதியுடன் செல்லல்

இராகம்—பைரவி கண்ணிகள்.

கோபிகாரமண கோகுலோத்ஸவ கோவிந்த ஜெயபாஹிமாம்
நந்த நந்தன இந்துவதன சுந்திர ஜெய பாஹிமாம்

குண்டலாலங்க்ரு, தாண்ட ஜாஸன புண்டரீகாக்ஷ பாஹிமாம்
சண்டகோதண்ட கண்டிதாசூர பண்டிதாஸ்ரய பாஹிமாம்

தானவாந்தக தீனமந்தார பானுவம்சஜ பாஹிமாம்
தான ஸௌண்டீர கானலோல சமானரஹித பாஹிமாம்

வாரணார்த்தினி வாரணாகில லோககாரண பாஹிமாம்
நாரதார்ச்சித வேதஸன்னுத பாத பங்கஜ பாஹிமாம்

சித்தஸன்னுத விருத்த சேவித சித்த சங்கல்ப பாஹிமாம்
பக்தவத்ஸல வத்ஸலாஞ்சன பத்ராத்ரீஸ்வர பாஹிமாம்

போதுப் பாட்டு.

இராகம்—முகாரி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

குண்டினமெனும் நகரில், குண பீஷ்மன் மகிபனுக்கு
பண்பொரு மைந்த ரைவருடனே பார்புகழ் செல்வக் குமாரி

ருக்மணியெனும் நாமம் வாய்ந்த பக்குவகுணமுடையாள்
விக்ரஹரூபியான வேணுகானன் கதையை விநயமாய் தான்கேட்டு

தோழிகளுடன்கூடி அம்மானை சூழப்பந்துகளாடி
பாழும் பிறவியை மாற்றிடும் மாதவன் பதமலர்களைப்பாடி

காயாம்பூ மேனியனும் கண்ணன் கழலடி பாடினல் நான்
ஓயாது கேட்பேனடி சகிகாள் உள்ளது சொன்னேனடி.

வஞ்சனை செய்தரக்கர் பொல்லா கஞ்சனை மாய்த்தவனை
தஞ்சமென்று நம்பினேன் அவரின் கொஞ்சம் மொழியும்கேட்க

எப்போது காண்பேனடி என்நாதன் யசோதை பாலகனை
முப்போது துதிப்பேனடி முதல்வனின் முத்தம் பெருவதற்கு

தப்பாது மணம் செய்வேனே சகிமாரே தாமோதரன் தன்னையே
ஒப்பாது தமையன்செய் சூட்சிகள் ஒற்று விறப்பேனடி முன்னையே.

கண்ணிகள் வேறு.

முத்தி நெறி அறியாத மெட்டு.

ஆரிலொரு கடமை கொண்டு அற நெறிகள் தவறாது
பாரினையே யாண்டு வரும் பார்த்திபனும் பீஷ்மனுமே

மந்திரிமார் தன்னுடனே மகிபனுமே யோஜித்து
சுந்தரியாள் ருக்மணிக்கு சுய வரனை முடிவு செய்தார்

எதுகுல திலகனுக்கே என் மகள் உகந்தவளாய்
வதுவைதனைச் செய்து வைக்க வகைதனையே சொல்லு மென்றான்

சாதுக்கள் ரக்ஷகனும் சத்துரு டயங்கரனும்
கோதில்லா குணமுடையான் கோபாலனே மகட் கிசைந்தோன்

தந்தையின் னுரை கேட்ட தருதலையாம் ருக்மியவன்
நிந்தையுடன் தானெழுந்து நேரிலெதிர் பேசலுற்றான்.

ருக்குமி சொல்லல் நோட்டு மெட்டு.

கண்ணிகள்.

என்ன சொன்னீரிச் சபையில் என் முன் சற்றறிவில்லாமல்
பன்னிய மொழியை கேட்க கேட்க பதருதே நெஞ்சம் ஆ ஹா ஹா

மன்னர்புகழ் சிசுபாலன் மாப்பிள்ளையாய் நமதருகிருக்க
பின்னமான துறை செய்தீர் பேசாதீரினி மன்னித்தேன்

மான யீனமில்லாது மங்கையர் வீட்டினில் இரந்துண்பான்
ஈனஜாதி இடையனுக்கோ என் தங்கையைக்கொடுக்க மனந்துணிந்
[தீர்

மாடு கன்று மேய்த்தவனே மாப்பிள்ளையாய் நமதருகிருப்பான்
நாடு புகழும் வரன் பார்த்தீர் நன்றா யிருக்குது வாய்மூடும்

பூதனையாம் பெண்ணைக் கொன்றான் புதுப்பால் வெண்ணை களவுண்
பாதகன் அவன் மாமனையே பதைக்கக் கொன்றான் நீர்மூடன் [டான்

அன்பன் மணிமுடி சிசுபாலன் அழகில் மிகுந்த குணசீலன்
இன்பம் பெருகவே மணம் செய்வான் எழுந்திரும் சபையைவிட்
[டேகு மென்றான்.

கண்ணிகள் ஆதிதாளம்.

இந்த வார்த்தை கேட்கவே மனம் இரங்கிவாடவே
ருக்மணி நொந்து வாடவே, விழிநீர் சிந்தியோடவே

கன்னிகை ஸ்ரீ ருக்மணி மனம் கலங்கி வாடவே
சகி, தன்னை நாடியே

ஏதடி சகி எனக்கென் அண்ணா எமனாய் வந்தானே
இதற்கென் செய்வேன் நானே

சேதிநகர்க் கரசன் மைந்தன் சிசுபாலனும்
நீதி, நெறியற்றவனும்

தாமதக்குண முடையோனவன் தயையில்லாதவன்
தையல் எனக்கு நாதனோ

பாவி இந்த ருக்மிக் கென்மேல் பகைக்கும் கோபமோ
மேவும், எந்தன் பாபமோ

இக்கவலை தீர்ப்போர் எனக்காருமில்லையே
என்ன செய்வேன் தொல்லையே

சரணமென்று நம்பினோர்க்குக் கருணாநிதியே
எனைக்காரும் பதியே.

இராகம்—காம்போதி, ஆதிதாளம்.

வேதியர் துதி, கண்ணிகள்

கோவிந்த கிருஷ்ணபாஹி எதுவீரா ராஜா
கோபால கிருஷ்ணபாஹி எது வீரா

ராதா மனக்குமுத பூர்ண சந்த்ரா புண்ய
காதா நந்திதமுனி ஜந ஸாந்திரா.

கமலா வல்லப திவ்ய கஞ்ஜ நேத்ரா கோப
யமுளார்ஜுன பஞ்சன நிலகாத்ரா

தாபாதி ரஹித தமால நீலா விஜய
கோபால கோபிஜென கேளி லோலா

சஞ்சலமணி குண்டல சாருஹாஸ, சண்ட
சாணு முஷ்டிகாசுர தமனஹாஸா (கோவி)

சாகி, மெட்டு.

கண்ணிகள் தர்க்கம்.

மறையவர் செல்வதை மாது ருக்மணி கண்டு
மாதரால் தன் முன்னழைத்து
இரங்கிய வரடியில் வந்திழை பணிந்து
என்னுயிற் கருள் புரியென்றாள். மாது (என்)

அடி பணிந்த மணியை அந்தணர் தேற்றி
ஆசி புகன்று பின் சொல்வார்
நொடிப் பொழுதிலுந்தன் நண்ணிய குறைதீரும்
படியாள்வோன் புதல்வியே கூறுமின் இப்போ (இப்)

மாதவனுக்கென்றே மாதுநான் வளர்ந்தேன்
மதியீனன் தமையனு மிப்போ
பாதகனும் சிசு, பாலனுக்கென்னையே
பாணிக்ரஹணம் செய்ய முயன்றான் பாவி (பாவி)

ஏதினிச் செய்வேன் ஏங்கித் துயரடைந்தேன்
எனதுயிர் விடவுந் துணிந்தேன்
ஆதரவு நீர் செய்தால் அடியாளுயிர் பிழைப்பேன்
அநுக்ரஹம் செய்யவே பணிந்தேன் ஸ்வாமி (அநு)

திருமகளுன் குறை தீர்க்கும் பாக்கிய மெனக்கு
மருவினால் என்போல் மாதே தன்யனுண்டோ
மருவிலா மங்கையே மாதவனுன்னையே
மணஞ் செய்யும் பாக்யத்தைப் பெருவாயம்மா (மண)

ருக்மணி சொல்லல்.

மாருபல் கேமிடே, மெட்டு.

பல்லவி ஆதிதாளம்.

மறையோரே ஈதுரைப்பீர் மாதவன் தனக்கிதமாகவே நாம் (ம)

அநுபல்லவி.

குறைவில்லா நிறை செல்வனை
கோறியே நிற்கின்றாள் குணமணியெனவே தாம் (ம)

சரணம்.

உடன் பிறந்த ருக்மியவன்
திடங்கொண்டெனை சிசுபாலனுக்கென விப்போ (ம)

தேவற்கென்ற அவிற்பாகத்தை
தேடியே வரும் துஷ்ட நாயென வாரானென (ம)

உனதடிக்கே அற்பணமாய்
உன்னிய ருக்மணியை இன்னல் தீர்ப்பீரென (ம)

பங்கஜத்தாளினைக்கு நான்
பாவை தந்த லிகிதத்தையும் சேர்த்து (ம)

வேதியர் சொல்.

விருத்தம்.

செல்லுவேன் நானுமம்மா சுருக்கினிற் துவாரகைக்கு
சொல்லுவேன், நின் துயர்கள் தீர சுந்திரவதனன் தன் பால்
வெல்லுவே நுன் குறைகள் யாவும் வேதத்தினந்தன் தன்னால்
நில்லுமென்ற வரையோட்டி நின்கரம் பற்றத்தானே.

இராகம்—புன்னாக வராளி, சாப்புதாளம்.

அநிலதரள, குவ லய நயனேன
தபதிந ஸாகிஸ லயசயனேன
யா்ரமிதா வனமாலினா சகியாரமிதா (யார)

விகஸித ஸரஸிஜ லலிதமுகேந
ஸ்புட தின ஸாமந விஜவிஸிகேந. (யார)

அமிர்த மதுர மிருது தரவசனேன
ஜ்வலதிந ஸாமல யஜபவனேன (யார)

ஸ்தலஜல ருகருஜி கரசரணேன
லுட திந ஸாஹிம கரகிரணேன (யார)

ஸஜல ஜலத ஸமு தயருஜி ரேண
தளதிந ஸாஹ்ருதி விரஹபரேண (யார)

கனகநீ யஜருஜி ஸுருஜி வசனேன
ஸ்வஸஸதிந ஸாபரி ஜக ஹஸனேன (யார)

ஸகலபுவந ஜெக வரதருணேன
வஹதின ஸாருஜ மதிகருணேன (யார)

ஸ்ரீ ஜெயதேவ பணித வசனேன
ப்ரவிசது ஹரிரபின ஹிருதயமனே (யார)

ருக்மணி துதித்தல்.

இராகம்—இந்துஸ்தான் காப்பி ஆதிதாளம்.

பல்லவி.

கண்ணா கருணைக் கண்ணால் பாராய்
மணிவண்ணா மனக்கவலை தீராய். வாராய் (கண்)

அநுபல்லவி.

எண்ணியே துதித்தேன் ஏற்றியும் பணிந்தேன்
உண்ணுதுருகி நொந்து வருந்துறேன்
உத்தமா சித்தம் ... வைத்துக் கார் கார். வாராய் (கண்)

சரணம்.

கோபியர் நேசனே கோகுலவாஸனே
தாபத்தினல் வாடுகின்றேனே நானே
தாமர சாக்ஷா நீ வா வா. வாருய் (கண்)

இராகம்—செஞ்சுருட்டி, ரூபகதாளம்.

பல்லவி.

கண்ணன் வருவாரோ சகியே மணி
வண்ணன் வருவாரோ (கண்)

அநுபல்லவி.

கண்ணன் வருவாரோ கவலையைத் தீர்ப்பாரோ
எண்ணமுந் தடுமாறுதே அடியென் சகி (கண்)

சரணம்.

இன்னமும் வரக்காணேன் எந்தன் ராஜகோபாலன்
அன்னமும் விஷமாகுதே அடியென் சகி (கண்)

ஆசை நேசமுள்ள அந்தரங்க கிருஷ்ணன்
பாசமாய் வருவாரோ அடியென் சகி (கண்)

காயாம்பூ மேனியன் கானலோல ப்ரியன்
காருண்யன் வருவாரோ அடியென் சகி (கண்)

மறையவர் சென்ருரோ மாதவனிடத்திலென்
குறைகளுரை செய்தாரோ அடியென் சகி (கண்)

பாவி ருக்மியென்னை பதரச் செய்கிருன் துரோகி
என், ஆவிதனைக் காப்பாரோ அடியென் சகி (கண்)

தந்தை சொற்கேளாத தமையன் பாவியாலெந்தன்
சிந்தை கலங்கலானேனே அடியென் சகி (கண்)

இடது பாகங்களெல்லாம் ஏனே துடிக்குதின்று
திடங் கொள்ளுதென் மனதும் அடியென் சகி (கண்)

தோழிகள், தேற்றுதல்.

திருப்புகழ் சரண கமலாலயத்தின் மெட்டு,

கண்ணிகள்.

மா துருக்மணியே யுந்தன் மனக்கவலை தீர்ப்பதற்கு
நீதன்றி வருவாரம்மா கண்ணனும்
சாதுக்கள் துதிஹிருதயன் சரணாகதரக்ஷகனும்
பாதுகார்ப்பார் தப்பாதிப்போ என்னம்மா.

தம்மை பஜிப்பவர்க்கு, இம்மை மறுமை யளிப்போன்
உம்மைக் கைவிடுவாரோ சொல் என் தேவி,
செம்மையுட னுமது மணம் சீருடன் நடக்கும் பார்ப்பீர்
வம்புசெய் துஷ்டரின் எண்ணம் நேறுது.

காலைவிடியு முன்னால் கார்முகில் வண்ணனே வந்து
மாலை சூடிகை கொள்வாரென் மடமானே
வேலை நிகர்த்த விழி வேணு கோபாலன் நன் தேவி
வாலைப் பருவத்திரு நாளாக.

ருக்மணியின், துதி.

இராகம்—பரசு, ஆதிதாளம்.

பல்லவி.

இன்னமு மிறங்காதா உமதுள்ளம்
எனமு யென் மீதில் வாதா ஹா கிருஷ்ணா (இ)

அநுபல்லவி.

உன்னை நினைந்து நான் உருகியே வாடுறேன்
என்னை நீர் கைவிட்டால் எவரெனக்கு கெதி (இ)

சரணம்.

முரளிகான லோலனே முகுந்தா குணசீலனே
தரணியில் நீ யென்னை தவிக்க வைப்பதாகுமோ (இ)

மாயவனே யுன்னை மனதில் நினைந்து நொந்தேன்
காயாம்பு மேனியனே கருணை நீ செய்குவாய் (இ)

மானமும் மானம் விட்டு மாதவனே யிங்கு
தானாகவே நின்று தனித்துப் புலம்பலானேன் (இ)

கருணா நிதியான கண்ணனே நின் பாதத்தில்
சரணாகதி யடைந்தேன் ஸ்வாமி யென்னை யாட்கொள்வாய் (இ)

ருக்மணியின் சோர்ப்பளம்தோழிகளிடம் கேழ்க்கல்.

இராகம்—சங்கராபரணம், சாப்புதாளம்.

பல்லவி.

நேராக வந்தவர் யார் சகி.
அடி நேரிழையே தேடிப்பார் சகி (நே)

அநுபல்லவி.

சீராய் என்னிடம் வந்து சிங்காரமாய்ப்பேசி
மாரன் கையி லொப்பித்து மாயமாய் மறைந்தவர் (நே)

சரணம்.

சங்கு சக்ர திவ்ய அஸ்தராய், அவர்
பங்கஜதள நிகர் நேத்ரராய், பூஷண
அலங்கார ஆனந்த காத்ரராய், பார்க்க
மங்கள ரூபத்துடன் மாதென்னிடம் நடந்து
பொங்கும் மகிழ்ச்சியுடன் இங்கேவந்தபிரபு (நே)

ஆசைப் பிசாசுகளை யோட்டினார்—நல்ல
ராஜமார்க்க சாலை காட்டினார்—வெகு
தாஸர்களைத் துணை கூட்டினார்—தம்மீதில்
ஆசை ஜெனிக்கவைத்தார் ஆத்மா நுபவத்துடன்
கேசவன் அவன்தானோ வாசன் வைகுண்ட நாதன் (நே)

நாச்சியார் திருமொழி

வாரணமாயிரம் சூழவலஞ் செய்து
நாரணன் நம்பி நடக்கின்றா னென்னெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ நான்,

வேதியர், துதியுடன் சேல்லுதல்.

இராகம்—நாதநாமக்கிரியை, சாப்பு தாளம்.

கண்ணிகள்.

பாஹி பாஹி ஜெகன் மோஹன கிருஷ்ணு
பரமானந்த ஸ்ரீ கிருஷ்ணு நித்யானந்த ஸ்ரீ கிருஷ்ணு
தேவகி வசுதேவ நந்தன கிருஷ்ணு
திவ்ய சுந்தர ஸ்ரீ கிருஷ்ணு (பா)

நந்த யசோதா நந்தன கிருஷ்ணு
இந்துவதன ஸ்ரீ கிருஷ்ணு (பா)

குந்தரதன குடி லாளக கிருஷ்ணு
மந்தஸ்மித ஸ்ரீ கிருஷ்ணு (பா)

சஞ்சல சல சல நூபுர கிருஷ்ணு
மஞ்சுளவேஷ ஸ்ரீ கிருஷ்ணு (பா)

கிண் கிணி ரசித கிணங்கிண கிருஷ்ணு
கிரீட லோல ஸ்ரீ கிருஷ்ணு (பா)

ஸாது; ஸாது நடவேஷ ஸ்ரீ கிருஷ்ணு
சத்திய சந்த ஸ்ரீ கிருஷ்ணு (பா)

பாலித நாராயண தீர்த்த கிருஷ்ணு
பரமபாவன ஸ்ரீ கிருஷ்ணு (பா)

போது விருத்தம்.

அந்தணர் வரவைப் பார்த்து அறிவிக்கக் காவலாளர்
சிந்தையும் மகிழ்ந்து கிருஷ்ணன் சென்றெதிர் வணங்கிக் கூட்டி
வந்தவாரதனைக் கேட்க வனிதையாம் ருக்மணி தன்
பந்தமாம் லிகிதமீந்து பகர்ந்திட்டார் நடப்பை எல்லாம்

வேதியர் சொல்லுதல்.

இராகம் நாதநாமக்ரியை ஆதிதாளம்.

பல்லவி.

எந்தன் மனுவைக் கேளும் கிருஷ்ணா, அந்த
எந்திழை ருக்மணியின் இயல்பைச் சுருக்கமாக (எ)

அநுபல்லவி.

மந்தஹாஸவதனி மாதனக்குகந்தவள்
மாமலர்தனைவிட்டு மகளாய்ப் பின் வந்திட்டாள் (எ)

சரணம்.

விதர்ப்ப தேசத்தை யாளும் மன்னன் வீஷ்மன் தனக்கு
குதர்க்கங்கள் நிறை புத்ரருடன் குணமணியாய்
சதுருடன் பிறந்தாள் ருக்மணி சகலரூபம்
இதரற்கு இல்லையென, எங்கும் புகழும் குணநல்லாள்.

இயல்புடையாள், எல்லோர்க்கும் தாயென,
இனியமொழி கூறும் சொல்லாள்.
சிசுபாலனை, சிந்தையிலொருபோதும்,
சிறிது மொவ்வாத தீரவல்லாள்.

வனமாலனே, வஞ்சியுனை மிஞ்சும்
சுபமணமது செய்யாதுயிர் நில்லாள்.
இனித்துறையாய், அச்சுதனே வந்து அழகியைக் கைப்பற்றி
மெச்சு மணமதைப்பின் மேன்மையாய் நடத்தும் (எ)

ருக்மணியின் லிகிதம்.

கண்ணிகள் ஆதிதாளம்.

கண்ணா உமதுயர் குணங்களைக் கேட்டு
காதல் மிகவடைந்தே னடியாள்
எண்ணா மனத்துயருன்னியே தமியாள்
ஏற்றிப் பணிந்தேன் இக்ஷணமருள் செய்ய (கண்)

மன்னு தமது நற்சீலம் குலம்பலம்
    மாவழகு நிறமிவை கேட்டு
கன்னிகையார்தான் வரியாருலகினில்
    காலந்தனி லெனைக்கைவிடாது கொள்வீர் (கண்)

சிங்கம் புஜிக்கும் சீர்க்வளமோர்
    சிறுநரி கவ்விட நியாயமுண்டோ
பங்கன் சயித்தியன் பாவி யெனைக் கொண்டால்
    பழியாரோ தமை பாரிலுள்ளோர்விட்டால் (கண்)

குலவழக்கம்போல் மலைமகள் தனையன்று
    கொண்டாடி பூஜித்து வரும் வழியில்
பலபல மன்னர் பார்த்துமே வெட்கிட
    பாவை யென்கையை பற்றிடத் துதித்தேன் (கண்)

அத்தருணம் தாம் அடுத்தெனைக் கொள்ளாவிடில்
    ஆவிவிடுப்பேனிது சத்தியம்.
சத்துருக்கள் யெனைப்பற்று முன்னடியாள்
    சார்ந்திடுவேன் சாந்தத் திருவடியில் நித்தியம் (கண்)

கிருஷ்ணன் சொல்லல்.

என்ன செய்வோம் தஞ்சம் நீயே மெட்டு.

பல்லவி.

கன்னல் மொழியாள்   ருக்மணியின்
கவலையைத் தீர்த்த   கண்ணியரே ஸ்வாமி
காருண்யம் நிறைந்த   புண்ணியரே (கன்)

அநுபல்லவி.

இன்னல்கள் செய்யும்   ருக்மியின் எண்ணம்
இனிப் பலிக்காது, ஸ்வாமி   தனிக் கெலிக்காது
ஏகிடுவோம் நாம்   இட்சண மங்கு
ஏந்திழை துயர்   தீர வாரீர் (கன்)

சரணம்

அரசர்கள் யாவரும்   விரசமாய் வரினும்
அடித்து விரட்டியே நான்   ஸ்வாமின்
முரசமுழங்க கொணர்வேன்   தப்பாது
முன்னமே யாம்   செல்வோம் வாரீர் (கன்)

பொதுப் பாட்டுகள்,

நோட்டு மெட்டு, சாப்புத் தாளம்.

கண்ணிகள்

சொர்ணமாம் தேரதனை சுருக்கினிலே தாருகனும்
வர்னமாம் புரவிகளை வலுவுடனே தான் கட்டி
வகை வகையாம் பாணங்களை மிகவெனவே தான் வைத்து
வைனதேயன் கொடியும் வானத்துடனுரவாட
வந்தெதிர் நிருத்தியே வணங்கினான் துரையாகவே (சொ)

மாதவனு மப்போது மறையவர் தன்னுடனேற
மங்கள வாத்தியமாசி மாமலரும் தான் தூவ
மகிழுடனே குதிரைகளும் மனமொன்று கூடியே நேர்
மனோ வேகம் முன்னிடவும் வாய் வேகம் பின்னிடவும்
மணமகளும் வரும்வழியில் இனமுடனே நின்றதுசீர் (சொ)

இரவிகுல நிறைசெல்வமே மெட்டு.

க ண் ணி க ள்.

சங்கரியின் பூஜை தன்னை மங்களமாய் செய்து
சங்கை கொண்டு ருக்மணியும் சகிமாருடன் வந்தாள்

அந்தணரும் சென்றனரோ அறியேனடி சகிகாள்
முந்தும் லக்னச் செயலிதற்குள் முகுந்தன் வருவாரோ

கண்ணானிங்கு வந்துற்றாரோ காணுங்களேன் சகிகாள்
எண்ணமது நிறைவேறவே ஏர்க்குங்காலமிதுவே

ருக்மணியின் வரவின்பக்கல் யுக்தியுடன் சென்று
பக்குவமாய் கைகொண்டிட்டார் பரந்தாமனும் விரைவாய்

இராகம் சுருட்டி, சாப்பு தாளம்.

பல்லவி

கோபாலன் ருக்மணியைக் கை கொண்டார் வெகு
கூட்டங்கள் மத்தியில் நாட்டம் வைத்தபடி (கோ)

அநுபல்லவி.

பூபாலர் யாவர்க்கும் — பொங்கும் கோபம் முந்த
பூவையைக் கைப்பற்றி — போருன் போகிருனென (கோ)

சரணம்.

சிசுபாலனுக் கென்ற பெண்ணையே — பாரும்
பசுபாலன் பற்றியேகத் — தகுமா
விஸ்வாஸ மானமுள்ள — வேந்தரே வாருங்கள்
நசுக்கியே கிருஷ்ணனை — நாரியை மீட்போமென (கோ)

சிங்கத்தைச் சிறுநரி எதிர்த்த — சீரென
சுற்றிலும் வளைத்திட்டார் — மன்னர்கள்
பங்கப்பட்டவரோட — பரந்தாமனடித்து
பாஞ்ஜ சன்யமெடுத்து — பம்பம் பெனவூதியே (கோ)

இதனை யறிந்ததுஷ்ட ருக்மியும் — கோபம்
மிதமின்றிப் பாணம் கையி — லேந்தியே
அதமனை நில்லடா — அடித்தேன்பார் வெல்லடா
அரிவையைக்கொண்டுசெல்ல — அடுக்குமோசொல்லென (கோ)

ருக்மியைப் பிடித்துக் கட்டியே — தேர்காலில்
முக்கோண ஐங்குடுமி — தீட்டியே
திக்கெங்கும் புகழ — தேவரும் மகிழ
தேருந் துவாரகைபுக — தெரிசிக்க யாவரும். (கோ)

சோபன மெட்டு.

கண்ணிகள் ஆதிதாளம்.

ஸ்ரீ ராஜகோபாலன் — ஸ்ரீருங்கார லோலன்
ஸ்ரீ ருக்மணியுடன் — தான் வரவே
பேரானந்தங்கொண்டு — பெண்கள் யாவரும்
ப்ரேமையாய் முத்தாலத்தி — யெடுத்தார்'

மகர தோரணங்கள் — கட்டியே அதில்
மாவிலைக் கொத்துகள் — கோர்த்தார்கள்

சிகரங்களில் கொடி — தேவர்கட்குச் சொல்ல
சீராய்ப் பறந்திடக் — கட்டினர்

வாழைக ளெங்கும் — வரிசையாய் கட்டி
வலங்காரம் செய்தார்கள் — நகரெல்லாம்
பேழைகளிலுள்ள — பட்டாடை பூஷணம்
போதுமான மட்டும் — பூண்டார்கள்

மங்கள தீபங்கள் — லக்ஷக்கணக்காய்
மாதர்க ளேத்தியே — பாடினர்.
திங்கள் வசீகர தேவி — ருக்மணியை
தேவரும் வாழ்த்தியே — போற்றினர்

அரண்மனை வாயலில் — வந்ததும் கிருஷ்ணன்
அன்னை தேவகி — யசோதையும்
ஆலாத்தி சுற்றியே — திருஷ்டி கழித்து
அன்புடன் — ருக்மணியை யழைத்தார்

இராகம்—பியாக், ஆதிதாளம்.

பல்லவி

கலியாணப் பந்தல்க ளிட்டார்கள் — கண்கள் கவர (கலி)

அநுபல்லவி

ஜொலிக்கவே திசை யெங்கும் — சுவர்ணமயமாக
சுற்றிப் பளிங்கிச்சுவர் — முற்றிலும் தெரிய
செலிக்கவே பந்தலின் — கைத் தொழிலாளர்கள்
செகனம்வரை முட்ட — அகமகிழ (கலி)

சரணம்

சுற்றும் பவழத் தூண்கள் — சுருள்கள் எழுத்துடன்
பற்று மேற்விட்டங்கள் — பச்சை மரகதங்கள்
சுற்றிடும் மேற்கட்டிநகர் — வெண்பட்டாடைகள்
நாற்புறமும் ஜாலர் — நற்சரிகையால் கட்டி (கலி)

முத்துச் சரங்கள் — மூலை மூலைகளில் தொங்க
நத்தவே நவரத்னம் — நடு நடுவில் தங்க
பத்திரை மாத்துப் — பதுமைக ளங்கங்கு
பார்ப்பவர் தன்னுடன் — பட்சமாய் பேச (கலி)

வாழை கமுகு தென்னை — வகைப் பழக்காய்ச் சரங்கள்
வரிசை வரிசையாக — வானம் வரைக்கட்டி
தாழை சம்பங்கி முல்லை — தவனம் மரு குருவேர்
தட்டிகளின் வாசம் — எட்டி வீசவும் (கலி)

இராகம்—பிலஹரி, கோட் மெட்டு, ஆதிதாளம்.

கண்ணிகள்.

மங்கள ஸ்நானம் செய்துமே — கிருஷ்ணன்
மடிவுடுத்தியே — மணவரைக்கி வந்தார்
மாதர்கள் கூடி — கீதம் பாடிட
மறையவர் வேதங்க — ளோதிடவே (ம)

வேதியர் கூடியே — ஹோமம் வளர்த்து
விருதங்கள் யாவையும் — முடித்தார்கள்
ஜாதி முறைப்படி — சடங்குகள் செய்துமே
சர்வாபரணங்கள் — பூட்டினார்கள் (ம)

பதினெண் வாத்தியம் — பக்கங்கள திரப்
பட பட வென நன்கு — முழக்கினார்கள்
பாத ரக்ஷை குடை — பக்கத்தில் மூட்டையும்
பரந்தாமன் புறப்பட்டார் — பரதேசம் (ம)

ருக்மணியின் தந்தை — பீஷ்மனு மெதிர் சென்று
இக்கணம் கன்னிகாதானம் — செய்வே னென
பக்குவமாக பிரார்த்திக்கத் — திரும்பினார்
பந்தலிற்குள்ளே — மணவாளர் (ம)

மாலைகள் மாற்றியே — மாதர்கள் பிடி சுற்றி
மஞ்சள் நீர் — பாலிட்டழைத்தார்கள்
காலை லெக்னங்கள் — கடவா முன்னமே
கங்கண மாங்கல்யம் — தரித்தார்கள் (ம)

ஆனந்த மானந்த மெட்டு.

பல்லவி.

மாங்கல்யம் தரித்தார் ஸ்ரீ கிருஷ்ணன் சுப (மா)

அநுபல்லவி.

மங்கை ருக்மணி தேவி சங்கை தீர்ந்து மகிழ (மா)

சரணம்.

லக்ஷ்மி கல்யாணங்கள் பாடவும் மாதர்
அட்சதை புஷ்பங்கள் ஆசியுடன் தூவவும் (மா)

பூரி சொர்ன தானங்கள் எல்லோர்க்கும் அப்போ
வாரியே கொடுத்தார்கள் ஆசை யடங்கும்வரை (மா)

முத்தாலத்தி யெடுத்து மங்கள கீதம்
சுத்தியே பாடினர் சுமங்கலி யாவரும் (மா)

கண்ணிகள்.

இராகம்—மத்யமாவதி, ஆதி தாளம்.

நலங்கிட வாருமென நாரி ருக்மணியும்
நந்த கோபன் மைந்தனை நாடியே வணங்கினள்

கதம்ப கஸ்தூரி மஞ்சள் கெந்தம் புஷ்பம் யாவும்
இதமுடன் சித்தம் செய்தேன் எழுகவெனப் பணிந்தாள்

மல்லி முல்லைச் செண்டுடனே மணமுள்ள நற் சாந்தும்
மெல்லியானும் சேகரித்தேன் முதல்வா வாருமென்றாள்

மஞ்சளிட்ட தேங்கா யுப்பு மாதவனே பருப்பும்
அஞ்சன வண்ணனே யப்பளாம் யாவும் சித்தஞ் செய்தார்

வெட்டி வேர் விசிறியுடன் விளங்கும் நற் கண்ணாடி
அட்டியன்றி சேகரித்தார் அன்பாய் வர அழைத்தாள்

இராகம்—அடாணா, ரூபக தாளம்.

பல்லவி.

நலங்கிடலானாள் ருக்மணி மகிழ்வாய்
நவநீத கிருஷ்ணனுடன் தானும் (நல)

அநுபல்லவி.

துலங்கும் மகிழ்வைத் தோழியர் காண
கலந்துவைத்த சந்தனமும் கதம்ப கஸ்தூரியுடன் (நல)

சரணம்.

கஸ்தூரி மஞ்சளைப் பூசினாள் மணி
கௌஸ்துவாபரணன் மார்பில் அழகாய்
விஸ்தாரமாம் பாட்டினைப்பாடி
வேடிக்கைகள் ஜோடிப்புடன் நாடிப்பல ஆஸ்யத்துடன் (நல)

புஷ்பச் செண்டுகளை யாடினார் கேலியாய்
பூவையுடன கிருஷ்ணன் எய்த்துமே
நட்பது மென் மேல் பெருக
நங்கைமார் கல், கல்லென நகைத்துக் கை தட்டிடவும் (நல)

தேங்கா யுருட்டியே பிடித்தார் கிருஷ்ணன்
தேவர்களுங்கண்டு மகிழப் பலமாய்
வாங்கவே யத்தேங்காய் தன்னை
வனிதை ருக்மணி தேவியும் வஞ்சித்துமே கைப்பற்றினாள் (நல)

கும்மி.

பூமேவும் ஸ்ரீ வில்லி புத்தூரில் மேவிய
பூங்கோதை சூடிக் கொடுத்தாள் தன்மேல்
தேன்மேவுங் கும்மி தமிழ்ப் பாடப் புகழ்
சேனையர்கோன் பதங் காப்பாமே.

பொங்கும் பேரானந்தக் கும்மியை ஸ்ரீ வில்லி
புத்தூராண்டாள் மேல் நாம் பாடிடவே

எங்கும் புகழவே மங்களமாய் வாழ
எதிராஜர் நற்பதங் காப்பாமே.

நாடிப்படித்தல முண்டான் கொண்டாட
சூடிக் கொடுத்திடும் கோதை தன்மேல்
பாடிப் படித்தாடும் நாடுங் கும்மிக்கினம்
பட்டர் பிரான் பதங் காப்பாமே.

நாகவல்லி ஜெக மோகவல்லி திரு
நாமவல்லி யுவ காமவல்லி
மேகவல்லி யனு ராகவல்லி யெழில்
வேதவல்லி திவ்ய கிதவல்லி

சிவிக்குழலினைப் பின்னலிட்டுச் சிலர்
சிங்காரக்கொண்டைச் சொருக்குமிட்டு
மேவிய கண்களில் மையிட்டு பொட்டிட்டு
மெல்லிய நற்பல்லில் காவியிடடு

பெருமை பெருந் திருமுக்குளமாம் திரு
பாற்கடல் மாமதில் சூழ்ந்தழகாம்
அருமையாய் பட்டற்கு மகளாகத் துளவத்தில்
அவதரித்தாளின் கும்மி யடித்தார்.

கோபிகள் சொல்லிக்கொள்ளல்.

ஓடம்.

நல்ல தினம் வாய்த்ததின்று நானுரித வாத்யத்துடன்
உல்லாசமாய் நாமெல்லோரும் இந்த ஓடத்தின்மேலேறிக்கொண்டு

கிருஷ்ணனுடன்,

சல்லாபமாகவே ஜலக்ரீடை செய்து
ஸ்வாமி முகுந்தனுடன் கூடி சுகித்து
புல்லாங்குழல் கானம் புண்ணியனும் செய்ய
பொற்கொடியாள் நாமெல்லாம் புனிதமாய் உய்ய
எல்லோருங்கூடியே ஏகிடுவோம் மகிழ
எமுனையில் சென்று விளையாடியே புகழ (எ)

பைங்கிளிமார் கோபியரே ஓடம் பழுதுவந்தா லென்ன செய்வோம்
செங்கமலற் கண்ணா நீரும் இப்போ. பங்கமன்றித் தாம் வருவீர்

கொங்குமலி நருங்குழலாள் கோபியரே கேளீர்
கோபங் கொண்டென்மீது குற்றஞ் சொல்லாதீர்
உங்களிஷ்டம்போல ஓடத்தில் வந்தேன்
ஒய்யாரமாகவே பாடுங்கள் கேழ்ப்போம்
எங்களிஷ்ட மகிழ எழுந்தருளும் கிருஷ்ணா
ஏதுங்குறைவன்றி ஏகுகிடுவோமிப்போ (ஏ)

பெண்களெல்லாம் பின்புறமும் முன்னால் பேச்சி முலை யுண்டவனும்
கண்ணனுடன் கோபியர்கள் கானத்துடன் செல்லுகையில்

கண்போலத் துவாரங்கள் கலத்தினிலேற்பட்டு
கங்கையும் உள்வரவே கண்டு கோபிமார்கள்
என் செய்வோ மென்றப்போ ஏந்திழைகள் பயந்து
யசோதை பாலகனை ஏற்றித் துதித்தார்.
அன்புடன் நாரணனும் அபயங்கொடுத்து
இன்பமுடன் கரைசேர்க்கச் சேர்ந்ததே ஓடம்

ஏலேலோ! ஏலோலம், கோவிந்தா!!
ஏலேலோ! ஸ்ரீராமஜெபம்,

இராகம் பிலஹரி, ரூபக தாளம்.

பல்லவி.

மலையா திருமணமே கோவிந்த ராஜன்
மலரடிபணி தினமே (ம)

அநுபல்லவி.

கலை தவிழ் மதிள் சித்திரகூடத்தை தேடியே
நாடியே விரைந் தோடியே
பலஸ்துதிகள் சொல்லும் ஒரு மதியில் நில்லு (ம)

சரணம்.

பேதை மதியினாலே பெரியோரைப் பழியாதே
பெற்ற அன்னை தந்தையர் பேச்சை யழியாதே
ஆதிமுதலாயுள்ள ஆஸ்தியை ஒழியாதே
அரிவையர் வலைக்குள் ளகப்பட்டு விழியாதே
அரண உதயம் நீராடுவாய் விஷ்ணு ஆலயங்களைத் தேடுவாய்
சரணமென்றவர் தாளில் கூடுவாய்
(சபல) புத்தியைத் தள்ளிப் போடுவாய் (ம)

கண்ட தெய்வத்தை யெல்லாம் கண் கொண்டு பாராதே
கல்லாத மூடர் தன்பால் கலந்து நீ சேராதே
தொண்டர்களைக் குறித்து தூஷித்துக் கூறாதே
சொல்லுறுதி யுண்டானால் துன்பங்கள் வாராதே
துஷ்டர் சேர்க்கை தள்ளுவாய் மது, சூதனன் கிருபை [பூணுவாய்
கஷ்டந் தீர்த்துவையென்று விள்ளுவாய்
கரும பாச முழுதுந் தள்ளுவாய் (ம)

பக்தியா யவன்மீதுன் பாரத்தை நீபோடு
பலவினைவையும் விட்டு பஜனை செய்துகொண்டாடு
சத்தியந் தவறாத சாதுக்களுடன் கூடு
சாயுஜ்ய பதவியைத் தரும் வழி தனைநாடு
ஜெனன மரணமும்நீங்குமே மற்ற சகல வினையும் பின் வாங்குமே
இனமும் தினமுந்தன் மனமு மோங்குமே
எமதண்டனை யில்லாது நீங்குமே (ம)

ஈ எரும் பெண்பத்தி நான்கு லக்ஷங்கோடி
எடுக்கவேண்டிய ஜென்மம் எடுக்காமல் வழிதேடு
ஓயாமல் கோபாலன் உரைத்த கீர்த்தனம்பாடி
உம்பற் கிடுக்கண் தீர்த்தவன் உள்ளம் மகிழக் கொண்டாடு
ஒரு பக்தியுடன் துளவி எடுப்பாய்
உபய பாதத்திலர்ச்சனை கொடுப்பாய்
இரு மனமுங் கொள்ள நீ கையெடுப்பாய்
இரவும் பகலும் அவனைத் துதிப்பாய். (ம)

இராகம், கமாஸ். ஆதிதாளம்.

பல்லவி.

உன்னைத்தவிர வேறில்லை கெதியெனக்கு (உன்)

அநுபல்லவி.

என்னை வந்தாதரிக்க இதுவே தருணம் சுவாமி (உன்)

சரணம்.

அன்னை தந்தையும் நீயே அகிலபந்துவும் நீயே
அன்னை ருக்மணிநேயா அன்பர்க் கருள்சகாய (உன்)

சங்கு சக்ரதாரி ஸாதுஜந ரக்ஷக
பங்கஜ லோசன பக்த பரிபாலன (உன்)

பாற்கடலில் துயின்ற பரம கிருபாநிதியே
கார்க்க இது தருணம் கண்ணா நீயேவருவாய் (உன்)

கோறு மடியேனுக்கு நேருஞ் சங்கடந்தீர்த்து
பாரும் கடைக்கண்ணாலே தாரும் வரங்களதை (உன்)

கரும வினைகள்தீர்க்கும் கருணா கடாக்ஷனே
அமரர்கள் போற்றிடும் அப்பனே ஸ்ரீ நாரணனே (உன்)

தாஸன் ஸ்ரீனிவாஸனை தயவுடனே ரக்ஷித்து
பாஸபந்த மகல சேவை சாதித்தருள்வாய். (உன்)

இராகம், எதுகுலகாம்போதி, ரூபகதாளம்.

பல்லவி.

ஆராவமுதே உந்தன் அடிபணிந்தேனே
ஆதரிப்பா யென் ஐயனே (ஆரா)

அநுபல்லவி.

நாராயணனே நின் நாமமே கெதியென்று
பாராயணஞ் செய்திடும் பக்தற் கனுகூலனே (ஆரா)

சரணம்.

தீராத வினைகளை தீர்க்குந் திருக்குடந்தை
ஊரானே உத்தமனே உன்பாதம் பணிந்தேனே
சாரங்கபாணியே தாஸன் ஸ்ரீநிவாஸனை
பாரளந்த விக்ரமா பக்தனைக் காப்பீரோ. (ஆரா)

இராகம், செஞ்சுருட்டி. ரூபகதாளம்.

கண்ணிகள்.

கோதண்டராமா கோதண்டராமா
கோதண்ட ரவிகுல கோதண்ட ராமா
நீதண்டமீகு மீரேந்துபோகு (கோ)

வாதேலமீகு வத்துபாரிகு
வந்தனமையா வாதேலனைய்யா
வஞ்சனஜேயுசு தகுநீதி ஐயா (கோ)

ஏ, புத்திவீடு ஏருகனிவாடு
பாபாடுவீடு படலியுன்னாடு (கோ)

தல்லியு நீவே தண்டிரியு நீவே
தாதவு நீவே தெய்வமு நீவே (கோ)

ஸ்ரீவிஜய ராமா ஸ்ரீங்கார பாமா
பாவிஞ்சு பிராமா பத்ராத்ரி ராமா. (கோ)

கண்ணிகள்.

பண்டரீஸேஜாவே ரகுமாயி தேவிவர பாகோ
காவிஜாதா திருவ்ய ஸமேளா
விடோபாலா துளசிஜ மாலா (பண்)

ஆணிக யாத்ரா பைஸா உடாக
விடோ பாலா தம்பதி ஸமேதா (பண்)

சந்த மகந்த ஹேதில பேட்டி
ஆனந்த வாஸு வானவண்டி (பண்)

ஜென்மா நாஹீரே ஆணிகா
துக்காமஹணே மாஜிபாலக (மண்)

கண்ணிகள் ஆதிதாளம்.

ஓ ராம நீ னும மெந்த ருஜிரா
ஸ்ரீராமா நின்னும மெந்த ருஜிரா
கதளி கஜூரி பல ரஸமுல கதிகமு
தாரக மகு நாமம் எந்த ருஜிரா (ஓ)

பனஸ ஜெம்புதிராக்ஷ பலமுல நீ கண்டே
பதித பாவந நாமம் எந்தருஜிரா (ஓ)

நவரஸ பரமாநந்த நவநீத நலகண்டே
நாதிக முனிநாமம் எந்தருஜிரா (ஓ)
ஸாரமுலேனி ஸம்ஸார ஸமுத்ரோ செடி
தாரக மருநாமம் எந்த ருஜிரா (ஓ)

கண்ணிகள்

முரஹர நகதர கோவிந்தா முகுந்த மாதவ ராமா
வாசுதேவா வனமாலாதர வைகுண்டாதிப ராமா
நந்த நந்தன கோவிந்தா நவநீத ப்ரிய ராமா
நாகசயன நளின விலோசன நாரத வந்தித ராமா
கமலாவல்லப கோவிந்தா கமனீயகன ராமா
கம்புக்ரீவ கடகாம் கத தர கார்முக பாணே ராமா
கரிராஜ ப்ரிய கோவிந்தா கஞ்சவிலோசன ராமா
கனகாம்பரதர கைவல்யப்ரத கௌஸ்துவ பூஷண ராமா
அகண்டரூபா கோவிந்தா அமித பராக்ரம ராமா
அபரிச்சின்ன அந்தர்யாமி அமர ஜனப் பிரிய ராமா
புண்டரீகாக்ஷா கோவிந்தா புராண புருஷ ராமா
புண்யஸ்லோக பூர்ணரூபா பூதன மௌத்தக ராமா
ஸாதுபோஷக கோவிந்தா ஸத்ஜன ஸுலப ராமா
ஸச்சிதானந்த ஸாமகானப்ரிய ஸரஸிஜ நேத்ரா ராமா
பக்தவத்ஸலா கோவிந்தா பாகவதப்ரிய ராமா
பார்க்கவ பங்க பரதஸஹோதர பத்ராத்ரிவாஸ ராமா,

நீனுமரூபமுலகு, மெட்டு.

பல்லவி.

கோபால கிருஷ்ணனுக்கும் கோமகட்கும் மங்களம் (கோ)

அநுபல்லவி.

பூபாரந் தீர்க்கவந்த புனிதனும் அசோதைக் குகந்த (கோ)

சரணம்.

தேவகித்தாய் வசுதேவருக்கும் திவ்ய வேணுகானத்திற்கும் (கோ)
ஆயர்பாடி மதுரை பிருந்தா அரண்யம் துவாரக்கும் ராஜ (கோ)

மங்களம்.

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், சென்னை.